₹100/-

ஞானஒரு

# மகிழ்ச்சி

அக்டோபர் 2022

எஸ்.கே.முருகன்



## பணம் தரும் மனம்




www.gyanaguru.com



# உங்களிடம் விஷம் இருக்கிறதா..?

சொர்க்கம், நரகம் என்பது ஒரு வளமான கற்பனை. நல்லவனாக இருந்தால் நீ சொர்க்கத்திற்குப் போவாய் என்று ஆசை காட்டியவர்கள், தீயவனாக இருந்தால் நரகத்துக்குப் போவாய் என்று பயமுறுத்தியும் வைத்தார்கள். பிறருக்குத் துன்பம் தராமல் வாழ்வதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவே, உலகத்திலுள்ள அத்தனை மதங்களும் இப்படி போதனை செய்கின்றன.

ஆனால், மரணத்துக்குப் பிறகு இப்படித்தான் நடக்கப் போகிறதா..? இந்த கேள்விக்கு யாரிடமும் உறுதியான பதில் இல்லை.

தெரியாத ஒன்றுக்காக நேரத்தை செலவிடுவதும் சிந்திப்பதும் தேவையில்லாத விஷயம். அதேநேரம், இந்த உலகத்தில் உயிருடன் வாழும் காலத்திலேயே மனிதனால் சொர்க்கத்தை அனுபவிக்க முடியும் என்பதுதான் உண்மை. அதற்காகவே இயற்கை எல்லோருக்கும் எல்லாவற்றையும் பொதுவாகக் கொடுத்துள்ளது. இயற்கை கொடுத்திருக்கும் எல்லாமே அமிர்தம்.

ஆனால், இயற்கையை மனிதர்கள் மதிப்பதில்லை. தங்களுக்கென தனி, சட்டதிட்டங்களை உருவாக்கிக்கொண்டு, இயற்கையைத் தாண்டி வாழ முயற்சி செய்கிறான். இயற்கை நியதிகளை மனிதன் ஒவ்வொரு முறை மீறும்போதும், அவன் உடலில் விஷம் பரவுகிறது. அந்த விஷத்தாலே, இந்த உலக வாழ்க்கை மனிதர்களுக்கு நரகமாகத் தெரிகிறது.

இப்போதும் எதுவும் கெட்டுப் போகவில்லை. ஆம், உடலில் பரவியிருக்கும் விஷத்தை அகற்றிவிட்டால், வாழ்க்கை சொர்க்கமாகிவிடும்.

விஷத்தை எப்படி அகற்றுவது..?

மனிதனின் சுயநலமே விஷம். இயற்கையைத் தாண்டி ஆசைப்படுவது எல்லாமே விஷம். சுருக்கமாகச் சொல்வது என்றால், ஒருவருடைய தேவைக்கு அதிகமாக வைத்திருக்கும் எல்லாமே, விஷம்.

நாளைக்குத் தேவை என்ற எண்ணத்தில் உணவை சேமித்து வைத்தால், அது விஷம். சந்ததிக்காக சொத்துக்களை சேர்த்துவைத்தால் அது விஷம். தகுதிக்கு மீறிய ஆசையும் விஷம்.

அதிக கோபம், அதிக பயம், அதிக நம்பிக்கை, அதிக சோம்பேறித்தனம், அதிக மகிழ்ச்சி, அதிக சோகம் என அளவுக்கு மீறிய ஒவ்வொரு நடவடிக்கையிலும் விஷம் உடல் முழுவதும் பரவுகிறது.

எனவே, உங்கள் உடலில் இருக்கும் விஷத்தை கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்ற முயலுங்கள். விஷம் வெளியேறும் ஒவ்வொரு கணத்திலும், உங்கள் உடலுக்குள் அமிர்தம் பாய்வதை உணர முடியும். உடலில் அமிர்தம் நிறைந்துவிட்டால், இந்த வாழ்க்கையே சொர்க்கமாக மாறிவிடும்.

அதன்பின்னர், எல்லாமே மகிழ்ச்சிதான்.

**ஆசிரியர்**

www.gyanaguru.com

# குழந்தைக்கு எப்படி கதை சொல்வது..?



ஞானகுருவை தேடிவந்த மகேந்திரன் படு சோகத்தில் இருந்தார். ஞானகுருவின் அருகே அமர்ந்ததும், ‘இந்த உலகத்திலேயே கஷ்டமான வேலை என்ன தெரியுமா..? குழந்தை வளர்க்கிறதுதான். என்ன சொன்னாலும் புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறாங்க. நாம வாழ்றதே அவங்களுக்காகத்தான்னு குழந்தைங்க புரிஞ்சுக்கிடறதே இல்லை” என்று சலித்துக்கொண்டார்.

‘’நீயும் அப்படித்தானே உன் பெற்றோரிடம் நடந்திருப்பாய்...”

‘’இல்லை. என் பெற்றோர்களைப் பார்த்தாலே பயப்படுவேன். எதற்கெடுத்தாலும் அடிப்பார்கள். அவர்கள் கண்டிப்புடன் வளர்த்த காரணத்தால்தான், இன்றைக்கு நன்றாக இருக்கிறேன். ஆனால், என் பிள்ளைகளுக்கு நான் என்ன சொன்னாலும் புரிவதில்லை. அடிக்கவும் மனம் வருவதில்லை... அவர்களிடம் எப்படி பேசுவதென்றே தெரியவில்லை” என்றார்.

“ம்... இந்த உலகமே கதைகளால் சூழப்பட்டது. எனவே, குழந்தைகளுக்கு அவர்களுடைய வயதுக்கு ஏற்ப சுவாரஸ்யமாக கதை சொல்லிப் பழகு. அவர்கள் உன்னிடம் ஒட்டிக் கொள்வார்கள்” என்றார் ஞானகுரு.

‘’நான் சின்ன வயதில் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறேன்... ஒரு சாக்லேட் வாங்குவதற்கு எத்தனை சிரமப்பட வேண்டும் என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறேன். ஆனால், அதை அவர்கள் காது கொடுத்துக் கேட்பதே இல்லை”

“நீ சின்ன வயதில் அனுபவித்த பசி, கண்டிப்பு போன்றவை அவர்களுக்குப் புரியாது. குறிப்பாக உன்னுடைய மோசமான பக்கத்தைப் பார்க்க அவர்கள் விரும்ப மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு சுவாரஸ்யமான கதைகளைச் சொல்லி உன் பக்கம் இழுத்துக்கொள். உன் குழந்தையிடம் இன்னமும்

மழலைத்தன்மை மாறவில்லை என்றால், அவனுக்கு ஏற்ப கதை சொல்லு...”

**“அப்படியொரு கதை சொல்லுங்களேன்..?”**

“ வெங்காயம், தக்காளி, முட்டைகோஸ், கத்திரிக்காய் எல்லாம் ஒரு தோட்டத்தில் வளர்ந்துக்கிட்டு இருந்திச்சு. ஒரு நாள் முட்டைகோஸை பறிச்சுட்டுப் போயிட்டாங்க. உடனே வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய் எல்லாம் முட்டைகோஸுக்காக அழுதிச்சு. அடுத்த நாள் தக்காளியை பறிச்சுட்டாங்க. அதுக்கு வெங்காயமும் கத்திரிக்காயும் அழுதிச்சு. அடுத்து, கத்திரிக்காயையும் பறிச்சுட்டாங்க... வெங்காயம் மட்டும் அழுதிச்சு. அப்போ அழுதுகிட்டே வானத்துக் கிட்டே, ’எல்லோரையும் பறிச்ச போது நான் அழுதேன், என்னை பறிச்சா யார் அழுவா’ன்னு கேட்டதாம்.

உடனே வானம், ’உன்னை பறிச்சுட்டு போய் யார் உரிச்சாலும், உன் பக்கத்துல இருக்கிற எல்லோரும் உனக்காக அழுவாங்க’ன்னு சொல்லுச்சாம். அதனாலதான் வெங்காயம் உரிக்கும்போது எல்லோரும் அழுகிறோம்னு சொல்லு. குழந்தை குஷியாகும். தொடர்ந்து உன்னிடம் கதை கேட்கும். வயது வளர வளர, உன் கதைகளின் தரமும் வளரட்டும். வானத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றன, பூமியில் எத்தனை உயிரினங்கள் இருக்கின்றன என்று தொடங்கி, இன்றைய அரசியல் நிகழ்வுகள் வரை நீ உன் வாழ்நாளில் கற்றுக்கொண்ட அத்தனையையும், சுவாரஸ்யமாக சொல்லிக்கொடு...”

“அவர்களுக்கு நீதி போதிக்க வேண்டாமா... பொய், திருட்டு, போதை போன்றவை எத்தனை கொடுமை யானது என்பதையும் சொல்லலாம்தானே...”

“பொய் சொல்லக்கூடாது என்று சொல்லிக்கொடுக்க வேண்டாம். நீ அப்படி வாழ்ந்து காட்டு. நீ திருட்டு, போதைகளில் இருந்து விலகி நில். உன்னை அப்படியே பிள்ளையும் பின்பற்றி நடக்கும். நீ வீட்டுக்குள் இருந்துகொண்டே, இதோ ஆபிஸ் பக்கத்தில் வந்துட்டேன் என்று பொய் சொன்னால், உன்னைவிட பெரிய பொய்யனாக பிள்ளைகள் வளரும்...”

**“சுவாரஸ்யமான கதைகளை சொன்னால் மட்டும் பிள்ளைகள் மாறிவிடுவார்களா..?”**

“கதைகள் என்பது பிள்ளைகளை உன்னிடம் வரவழைக்கத்தான். அப்படி வரும் குழந்தைகளுக்கு வாழ்க்கைக்கு என்னவெல்லாம் தேவையோ, அவற்றை எல்லாம் சின்ன வயதில் இருந்தே கற்றுக்கொடு. ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என்று வித்தியாசம் பார்க்காமல் நீச்சலடிக்கக் கற்றுக்கொடு. சைக்கிள் ஓட்ட கத்துக் கொடு. இவை எல்லாவற்றையும்விட சமையல் செய்ய கற்றுக்கொடு...”

**”சமையல் செய்யவா..?”**

“ஆம்... அதுதான் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான கலை. உணவுப் பொருட்கள் எப்படி விளைகிறது, அதனை வீட்டுக்குக் கொண்டுவர எத்தனை சிரமப்பட வேண்டியிருக்கிறது என்பதை வயலுக்கு கூட்டிப் போய் காட்டு. மார்க்கெட்டுக்கு கூட்டிப் போய், காய்களை எப்படி தேர்வு செய்து வாங்குவது என்பதை சொல்லிக்கொடு. காய்களை சுலபமாகவும், வேகமாகவும் நறுக்குவதற்கு கற்றுக்கொடு.



“ உடல் நலமில்லாத எதிரியை மெய்யன்புடன் சந்தித்து ஆறுதல் சொல். நல்ல நண்பன் கிடைப்பான். ”

**மந்திரச்சொல்**

அடுப்பை கையாள்வதற்கும் கற்றுக்கொடு. சப்பாத்தியில் தொடங்கி தோசை, பிரட் என்று சிம்பிளாக ஆரம்பித்து சாதம் வைக்கவும் கற்றுக்கொடு. குறிப்பாக பால் சாதம், மோர்சாதம், லெமன் சாதம், தக்காளி சாதம் என்று, தனக்குத் தேவையானதை பிள்ளையே சமைப்பதற்கு கற்றுக்கொடு. அதைவிட முக்கியம், சாப்பிட்ட பாத்திரங்களை கழுவச் சொல்லிக் கொடுப்பது

அதேபோல் பணத்தை சேகரிக்க கற்றுக்கொடு. நீ கொடுக்கும் பணத்தில் பிள்ளையே நோட்டு, புத்தகம், தின்பண்டம் போன்றவற்றை வாங்குவதற்கு பழக்கு. அப்போதுதான், அவன் எவ்வளவு செலவு செய்கிறான் என்பது தெரியவரும்.

பொது போக்குவரத்தான பஸ், ரயிலில் பிள்ளைகளைக் கூட்டிப் போ. அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவரை சந்திக்கச் செல்லும்போது மறக்காமல் குழந்தையையும் கூட்டிச் செல். தினமும் பொழுதுபோக்குவதற்கும், விளையாடுவதற்கும் ஊக்கம் கொடு...”

**”இப்படி ஒரு வேலைக்காரனுக்குத் தேவையானதை எல்லாம் சொல்லிக்கொடுத்தால், அவன் படிப்பு என்னாகும்..? எப்படி நல்ல மதிப்பெண் வாங்குவான்..? எப்படி வேலைக்குப் போவான்..?”**

“இன்று நீ கவலைப்படுவது போலவே, உன் பிள்ளையும் அவன் பிள்ளையை நினைத்து வருத்தப்பட வேண்டும் என்று நீ நினைத்தால், அவனை பாடம் மட்டும் படிக்கச் சொல். அவனும் அவன் பிள்ளைகளும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று நீ நினைத்தால், வாழ்க்கையைக் கற்றுக்கொடு. படிப்பை அவன் பார்த்துக்கொள்வான்...”

பதில் சொல்ல முடியாமல் தவித்தார் மகேந்திரன்.

www.gyanaguru.com



# உன் ஆலயத்தை வணங்கு...!



குளித்துமுடித்து கரையேறிய ஞானகுருவை வணங்கி நின்ற மகேந்திரன், ”தினமும் ரசித்துக் குளிக்கிறீர்கள். அழியக்கூடிய இந்த உடல் மீது இத்தனை பற்று வைக்கக் கூடாது என்று சித்தர் பெருமக்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் இந்த உடல் மீது மிகவும் ப்ரியமாக இருக்கிறீர்களே?” என்று கேட்டார்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. ”இந்த உடலானது எந்த நேரத்திலும் உடையக்கூடிய மண் பாண்டம், காற்றடைத்த பை என்றெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்கள். அது உண்மையாகவே இருக்கட்டும். உனக்கு இயற்கை கொடுத்திருக்கும் பொக்கிஷம்தான் இந்த உடல். இதனை பாதுகாத்து, திரும்பவும் அதனிடம் ஒப்படைக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை.

அதனால்தான் உடம்பை ஊனுடம்பே ஆலயம் என்று கூறியிருக்கிறார்கள். ஆம், மனிதன் வணங்கக்கூடிய முதல் ஆலயம் அவனுடைய உடம்புதான். அதை ஆலயம் போன்று சுத்தமாக பராமரிக்க வேண்டியது அவனுடைய கடமை. இதனை நீ முறையாக பராமரிக்கவில்லை என்றால் குப்பையாக மாறிவிடும். அந்த குப்பையில் இருந்து கெட்ட எண்ணங்களும் தீய விளைவுகளும்தான் ஏற்படும். உடல் தரும் இன்பத்துக்கு முக்கியத்துவம் தராதே என்றுதான் சொன்னார்கள். எண்ணெய் பலகாரம், இனிப்பு போன்றவைதான் நாக்குக்கு மிகவும் பிடிக்கும். தவறான விஷயங்களை பார்க்கத்தான் கண்கள் விருப்பப்படும். கெட்ட விஷயங்களைக் கேட்கவே காது விரும்பும். இப்படி மனித அவயம் ஒவ்வொன்றும் தற்காலிக சுகத்துக்கு ஆசைப்படுவது இயல்புதான்.

இன்பம் அனுபவிப்பது தவறல்ல. அதனால் உடலுக்கு ஊறு வரக்கூடாது. அறுசுவைகளையும் ரசித்து உண்ண முடியும். நல்ல அனுபவங்களைக் கேட்க முடியும். உலகின் அழகை தரிசிக்க முடியும். இப்படியும் உடலுக்கு இன்பம் தர முடியும். இந்த உடலின் நோக்கம் என்ன தெரியுமா? நீண்ட நாட்கள் வாழ முயற்சிப்பதுதான். அதனை செம்மை யாக நிறைவேற்ற வேண்டும் என்றால், உடலை பராமரிப்பதும் பாதுகாப்பதும் அவசியமே. இந்த உடலை குப்பையாகப் பார்க்காதே, இதுதான் சொர்க்கம்” என்றார் ஞானகுரு

தன் உடலை ஒரு முறை பார்த்துக்கொண்டார் மகேந்திரன்.

www.gyanaguru.com

# ஞானகுரு பதில்கள்

**? ஆடம்பரத்துக்காக பலரும் அதிகம் செலவழித்து கஷ்டப்படுகிறார்களே..?**

**- டி.மாணிக்கம், நாகர்கோவில்.**

**ஞானகுரு :**

அவசியம், ஆடம்பரம் என்று ஒன்றை தீர்மானிப்பது அவரவர் உரிமை. ஒரு காலத்தில் மிக்ஸி, கிரைண்டர், ஃபேன், தொலைக்காட்சி போன்றவை ஆடம்பரச் செலவாக இருந்தது. ஆனால் இன்று ஏசி, கார் போன்றவையும் அத்தியாவசிய பட்டியலுக்குள் வந்துவிட்டது. அடுத்தவர் விஷயத்தில் உன் மூக்கை நுழைக்காமல், உன் விஷயத்தை மட்டும் கவனி.



**? தாய்மையை போற்றுவது எதனால்..?**

**- எம்.ராஜசேகர், தூத்துக்குடி.**

**ஞானகுரு :**

பிள்ளை ஒரு கவளம் சோறு மிச்சம் வைத்துவிட்டால், வயிற்றில் பிரச்னையோ என்று வருத்தப்படுபவள் தாய். பெற்றெடுத்த பிள்ளை நல்லவன் என்றாலும், கெட்டவன் என்றாலும், தன் மரணம் வரையிலும் விட்டுக்கொடுக்காமல் பாதுகாப்பவள் தாய். பெண் தவிர வேறு எந்த உயிரினமும் வாழ்நாள் முழுவதும் பிள்ளைக்காக இப்படி தியாகம் செய்வதில்லை. ஆனால், தாயை எந்த பிள்ளையும் உயிருடன் இருக்கும்போது கண்டுகொள்வதில்லை. செத்தபிறகுதான் தலையில் தூக்கிவைத்து போற்றுகிறான்.





**? இளமை, முதுமை எது இனிது?**

**- எஸ்.பூங்காவனம், சென்னை.**

**ஞானகுரு :**

இளமை, முதுமை என்பதெல்லாம் உடலுக்குத்தானே தவிர மனசுக்கு இல்லை. ஒவ்வொரு வயது அதிகரிக்கும்போதும், அனுபவங்கள் வரவாகிறது என்ற சந்தோஷம் வரவேண்டுமே தவிர, இளமை செலவாகிறதே என்ற அச்சம் வரக்கூடாது.



**? பிறர் சொத்தை பறிக்க முயல்பவன் பலசாலியா, மூடனா?**

**- எஸ்.சாந்தி, அவினாசி.**

**ஞானகுரு :**

இந்த பூமியில் எவருக்குமே சொந்தமாக எந்த சொத்தும் கிடையாது. அதனால் தற்காலிகமாக, பிறர் சொத்தை அடைய நினைப்பவன் முட்டாள் மட்டுமல்ல, பரிதாபத்திற்குரியவன்.

**? ஆசைக்கும், பேராசைக்கும் உள்ள வித்தியாசம் என்ன..?**

**- பி.சந்திரமோகன், வத்றாப்**

**ஞானகுரு :**

ஒரு நாட்டுக்கு அரசனாக வேண்டும் என்பது ஆசை. இந்த உலகையே ஆளவேண்டும் என்பது பேராசை. அதனால்தான் அலெக்சாண்டர் ஏராளமான நாடுகளை வெற்றி கொண்டபிறகும், அவருக்கு ஆனந்தம் உண்டாகவில்லை. இந்த உலகம் முழுமையாக வெற்றி கொண்டிருந்தாலும், அவர் சந்தோஷம் அடைந்திருப்பது சந்தேகம்தான். ஏனென்றால் நிறைவேறாது என்று தெரிந்தும் ஆசைப்படுவதே பேராசை. சிம்பிளாக சொல்வது என்றால் திருமணம் முடிக்க நினைப்பது ஆசை. திருமணத்திற்குப் பின் கணவன் அல்லது மனைவி தன்னுடைய சொற்படி நடக்கவேண்டும் என நினைப்பது பேராசை.





**? ஞானகுருவின் வேலை என்னவோ..?**

**- சி.ராஜாராமன், அய்யனார் நகர்.**

**ஞானகுரு :**


தேடுதல்தான் வேலை. இந்த மாபெரும் பிரபஞ்சம், தானே உருவாக எந்த வாய்ப்பும் இல்லை. அப்படியென்றால் இந்த பிரபஞ்சத்தை படைத்தது யார்? ஒரு வேளை கடவுள் என்றால், அந்தக் கடவுளை உருவாக்கியது யார்? கடவுளை யாரும் உருவாக்கவில்லை என்றால், இந்த பிரபஞ்சம் உருவானது எப்படி..? பிரபஞ்சம் உருவாவதற்கு முன்பு என்ன இருந்தது..? என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் தேடுவதுதான் ஒவ்வொரு ஞானகுருவின் வேலையும். எடிசன் பல்பு கண்டுபிடித்ததும் உலகமெல்லாம் வெளிச்சம் வந்தது போல், ஞானகுருவின் கண்டுபிடிப்பினால் நீயும் ஒருவேளை உண்மையை அறியலாம். காத்திரு… நீயும் கண்டுபிடி.

**? வாழ்க்கையில் சலிப்பு ஏற்படக் காரணம் என்ன?**

**- கவிதா, சங்கரன்கோவில்.**

**ஞானகுரு :**

ஜோரான மல்லிகைப்பூ இட்லி என்றாலும் தினமும் சாப்பிட்டால் சலிப்பு தோன்றுவது சகஜம்தான். அதனால் புதிது புதிதாக முயன்று பார், தோல்வி வந்தாலும் அது சுவாரஸ்யமாக இருக்கும்.



**? உறவுகளுக்கிடையே ஏற்படும் மனக்காயத்தை போக்குவது எப்படி?**

**- பி.கதிரேசன், சாத்தூர்.**

**ஞானகுரு :**

ரோஜா செடியில் முட்கள் இருப்பது இயல்புதான். எந்த ஓர் உறவையும் நெருங்கவும் செய்யாதே, விலகியும் செல்லாதே. சரியான இடத்தில், சரியான தடத்தில் செயல்படு. காயம் ஏற்பட்டாலும் கடந்துபோய் விடும்.





www.gyanaguru.com

? பணத்திமிர் எப்போது அடங்கும்..?

- வி.முனியசாமி, அழகாபுரி.

**ஞானகுரு :**

மனிதன் படைப்பில் அதிஉன்னதமானது பணம். கடவுள் போன்று பணத்துக்கும் அதீத சக்தி உண்டு. பணம் எனும் ஆயுதத்தை நிதானமாகப் பயன்படுத்துபவனை, அது கேடயமாகப் பாதுகாக்கும். அதேநேரம், பணத்தை தன்னுடைய அகங்காரமாக காட்டுபவனை, அந்த பணமே அடக்கிவிடும்.



? பொய்யர்கள் நன்றாக வாழ்வதுபோல் தெரிகிறதே?

- ஜி.குணசீலன், சாட்சியாபுரம், சிவகாசி.

**ஞானகுரு :**

பொய்யர் அல்லது நல்லவர் என்று பிறருக்கு சான்றிதழ் கொடுக்கும் தகுதியை உனக்கு யார் கொடுத்தது... அவரவர் வாழ்க்கையை அவரவர் வழியில் வாழ்கிறார்கள். பிறர் வாழ்க்கையைப் பார்த்து உன் வழியை மாற்றாதே... தொலைந்துபோவாய்.



? வாழ்வின் சங்கடங்களிலிருந்து எப்படி விலகிச் செல்வது?

- டி.அனிதா, திருவண்ணாமலை.

**ஞானகுரு :**

சங்கடத்திற்கு யார் காரணம் அல்லது எது காரணம் என்பதை ஆராய்ந்து பார். அந்த சங்கடத்துக்கு தீர்வு கண்டுபிடி. அதுதான் சங்கடத்திலிருந்து விலகும் வழி. ஏனென்றால், ஒரு சங்கடத்தில் இருந்து விலகினாலும், அடுத்து ஒன்று வரத்தான் செய்யும். எனவே, விலகிச்செல்வதைவிட புரிந்து ஏற்றுக்கொள்.




? மேடைப் பேச்சாளராக என்ன செய்ய வேண்டும்?

- பி.சகுந்தலா, அரவக்குறிச்சி

**ஞானகுரு :**

நல்ல ஞாபகசக்தி வளர்த்துக்கொள். எப்போதோ எங்கேயோ படித்த 10 சங்ககாலப் பாடல்களை மளமளவென மேடையில் ஒப்பித்துப் பார். அர்த்தமே புரியவில்லை என்றாலும் வலிக்கவலிக்க கை தட்டுவார்கள்.

# ஞானகுரு பதில்கள்

? நிம்மதியான வாழ்க்கை வாழ்வது யார்..?

- ஏ.சந்தியா மோகன், விருதுநகர்.

**ஞானகுரு :**

படுக்கையில் படுத்த பத்து நிமிடங்களுக்குள் தூங்கிவிடும் அத்தனை நபர்களும் நிம்மதியாளர்கள்..







? குலதெய்வ வழிபாடு பற்றி சுருக்கமாக சொல்லுங்கள்?

- சி.சுந்தர், பாளையங்கோட்டை

**ஞானகுரு:**

தந்தைவழி முன்னோர்களைக் கும்பிடுவது குலதெய்வ வழிபாடாக கருதப்படுகிறது. மானம் காப்பதற்கு தியாகம், வீரமரணம், தற்கொலை, கொலை என உயிர் விட்டவர்களே பெரும்பாலான குலதெய்வங்களாக இருக்கின்றனர். இவர்கள் பேயாக, பிசாசாக மாறி குடும்பத்தினரை தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக தொடங்கியதே இந்த வழிபாடு. பயத்தில் தொடங்கப்பட்ட இந்த வழிபாடு, இப்போது கூட்டாஞ்சோறு சாப்பிடவும், சொந்த சாதியை வளர்க்கவும் பயன்படுகிறது. வரலாறு படிக்கவேண்டியது மட்டுமல்ல பாதுகாக்கவும் வேண்டியதுதான். ஆனால் வழிபடும் அளவுக்குத் தகுதியானது அல்ல.




? உடலுக்கும் மனதுக்கும் சம்பந்தம் உண்டா?

- எஸ்.சிவகாமி, கடலூர்

**ஞானகுரு :**

உடல் என்ற பருப்பொருளை ஆட்டிவைப்பது மனமே. தலை வலிக்கு மாத்திரை போடலாம் அல்லது தானே சரியாகிவிடும் என்று முடிவெடுப்பது மனம். தற்கொலைக்கு உடலைத் தூண்டுவதும் மனம். ஆனால் உடலால் மனதை ஒருபோதும் இயக்க முடியாது. எனவே, நல்ல உடல் நலத்திற்கு ஆசைப்படுபவர்கள், முதலில் மனதை வசப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும்.






? பலரும் வாக்கு தவறி நடக்கிறார்களே, ஏன் எதற்காக?

- பி.ராஜபாண்டி, கோவை

**ஞானகுரு :**

விவாகரத்து செய்யவேண்டும் என்பதற்காக யாரும் திருமணம் முடிப்பதில்லை. ஆனாலும், விவாகரத்து நடக்கத்தான் செய்கிறது. அப்படித்தான் ஒருசிலருக்கு சூழல் அனைத்து கேடுகளுக்கும் காரணமாக அமைகிறது.




? நிம்மதியாக இரவில் தூங்க வழி இருக்கா?

- ஏ.பிச்சை, ஸ்ரீவில்லிபுத்தூர்.

**ஞானகுரு :**

எத்தனை பெரிய துன்பத்தில் இருக்கும் மனிதனுக்கும், மாபெரும் ஆறுதல் தரக்கூடியது உறக்கம். ஆனால் உறக்கத்தை நீ தேடிப் போகாதே, அது உன்னைத் தேடி வரட்டும். அதுவரை உறக்கத்திற்கு காத்திருப்பது தெரியாதவகையில் வேறு ஏதேனும் செயலில் ஈடுபடு. உறக்கம் கண்களைத் தட்டியதும் படுக்கையில் விழு, நிம்மதியாக கண் விழிப்பாய்.



# பலவீனங்களும் அழகானவை ஏற்றுக் கொள்ளுங்கள்..!

இந்த உலகத்திலேயே நல்லவர் என்றால், அது தான் மட்டும்தான். ஆனால், தன்னை யாருமே முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என்ற எண்ணம்தான் நிறைய மனிதர்களுக்கு இருக்கிறது. அதனால்தான், மற்றவர்களை அப்படியே ஏற்றுக்கொள்வதில் தயக்கம் நிலவுகிறது.

ஒவ்வொரு நபருக்கும் பலம் இருப்பது போலவே, பலவீனமும் இருக்கிறது. நூறு சதவீதம் முழுமையான ஆணும், பெண்ணும் இந்த உலகில் யாருமே இல்லை என்பதுதான் உண்மை. கடவுளாக இருந்தாலும், அவரிடமும் சில குறைகளை அவரது மனைவியால் கண்டுபிடித்துவிட முடியும்.

எப்போது, குறைகளுடன் பிறரை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகிறீர்களோ, அப்போது வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறிவிடுகிறது.

மனைவி அழகாக இருப்பதை எப்படி விரும்புகிறீர்களோ அப்படியே அவருக்கு சுவையாக சமைக்கத் தெரியாததையும் விரும்ப முடியும். கணவனின் தைரியத்தை மெச்சுவது போலவே, அவரது சோம்பேறித் தனத்தையும் ஏற்பது சுலபம்தான்.

பலத்தையும் பலவீனத்தையும் ஒருசேர ரசிக்க முடியாதவர்களுக்கு, வாழ்க்கை மோசமான பாடத்தை கற்றுக்கொடுத்துவிடும். அப்போது, நீங்கள் ரசிக்க நினைத்தாலும் முடியாமல் போய்விடும் என்பதை சொல்வதற்கான கதை இது.

ஒரு வீட்டில் மரணம் நிகழ்ந்திருந்தது... கணவர் இறந்திருந்தார். பல வருடங்களாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலேயே சில காலம் அவதிப்பட்டு, பிறகு அந்த நபர் இறந்து போனார்.

கணவர் நோய் தாக்குதலுக்கு ஆளாகி படுக்கையில் விழுந்த நேரத்தில், அவரது மனைவி குடும்பத்தின் சுமைகளை சுமக்க வேண்டியிருந்தது. அவரையும் குழந்தைகளையும் பராமரித்தல், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்தல் மட்டுமன்றி வருமானத்தை பற்றியும் யோசிக்க வேண்டியிருந்தது.

படுக்கையிலேயே சுயநினைவின்றி கழிவகற்றும் நிலை ஏற்பட்ட போது அவள் மிகுத்த அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதன் துர்நாற்றம் அந்த வீட்டையே தலைகீழாக மாற்றத் தொடங்கியிருந்தது. யாரும் முகம் சுளித்துவிடக் கூடாது என்று அஞ்சி வீட்டை சுத்திகரித்துக் கொண்டேயிருந்தாள். திரும்ப திரும்ப வீட்டை கழுவினாள். ஆடைகளை கழுவினாள். மெத்தையை, தலையணையை அடிக்கடி வெயிலில் காய வைத்தாள். அவளது மனம் திருப்தியடையும் வரை தரையைத் துடைத்துக்

www.gyanaguru.com
www.gyanaguru.com




"

நாம் நேசிப்பவர்களிடம்
உள்ள பலவீனங்கள் நமக்கு
எரிச்சலை ஏற்படுத்தலாம்.
ஆனால் அது அற்புதமான
நினைவாக தோன்றுவது
அவர்களை இழந்த
பின்னர்தான். எனவே
அவர்களின் சிறிய
பலவீனங்களை மன்னியுங்கள்.

கொண்டேயிருந்தாள்.

இவ்வாறாக ஒரு நாளில் கணவர் இறந்தும் போனார். இறுதி சடங்குகள் முடிவடைந்த பின், நெருங்கிய சொந்தங்கள் மட்டுமே வீட்டில் இருந்தனர். அவர்களிடம் பேசத் தொடங்கினாள் மனைவி.

"நான் அவரைச் சந்தித்தபோது அவர் மிகவும் அழகான நேர்த்தியான இளைஞன். எனவே நான் அவரை ஒரே பார்வையில் விரும்பினேன். நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். எமது தாம்பத்யம் இனிமையானது. குழந்தைகளை உருவாக்கியது.

ஆனால் நான் அவரை மணந்ததிலிருந்து, ஒரு இரவேனும் நிம்மதியாக தூங்கியதில்லை. ஏனென்றால் அவரது குறட்டை சத்தம் மிகவும் இம்சைப்படுத்தியது.

அது விசித்திரமான குறட்டை. ஒரு தொழிற்சாலையின் மொத்த இயந்திரங்களின் ஓசையை விடவும் இரைச்சலாய் இருக்கும். நான் 35 ஆண்டுகளாக இந்த பிரச்சினையை அனுபவித்தேன்.. எனக்கு இப்போது 60 வயது.

25 முதல் 60 ஆண்டுகள் வரை நான் தூக்கமின்மையால் அவதிப்பட்டேன். இவ்வாறான துன்புறுத்தலை எந்தப் பெண்ணும் பொறுத்துக்கொள்ள மாட்டாள்.

இவ்வாறாக இறுதியில் அவர் நோய்வாய்ப்பட்டார். வழக்கம் போல அவரது குறட்டையும் தொடர்ந்தது. ஆனால் அப்போது அந்த இரைச்சல் எனக்கு ஆச்சரியமான ஆறுதலைக் கொடுத்தது. அவர் இன்னும் உயிருடன் இருப்பதை அதை கொண்டே நான் அறிந்து கொண்டேன். குறட்டை சத்தம் சிறிது நேரம் நின்றுவிட்டால் நான் விழித்து விடுவேன். குறட்டை இரைச்சலின்றி என்னால் தூங்க முடியவில்லை. குறட்டை சத்தம் வரவில்லையென்றால் அவரை உலுக்கிப் பார்த்தேன். சுவாசிக்கிறாரா என மூக்கில் கைவைத்துப் பார்ப்பேன்.

இப்போது அவர் இறந்து விட்டார். அவர் இனி ஒருபோதும் குறட்டை விட மாட்டார். அந்த இரைச்சலை நான் இனி கேட்கவே மாட்டேன் என நினைக்கும் போது ஏற்படும் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை.

அந்த ஒலியை மீண்டும் கேட்க மாட்டேனா? என மனம் ஏங்குகிறது. எல்லாவாற்றையும் யாரோ திருடிச் சென்றது போல இருக்கிறது.

எனவே நான் உங்களுக்கு சொல்வதெல்லாம்.. நாம் நேசிப்பவர்களிடம் உள்ள பலவீனங்கள் நமக்கு எரிச்சலை ஏற்படுத்தலாம். ஆனால் அது அற்புதமான நினைவாக தோன்றுவது அவர்களை இழந்த பின்னர்தான். எனவே அவர்களின் சிறிய பலவீனங்களை மன்னியுங்கள்.

அவர்களை விட்டு விடுங்கள். அந்த பலவீனங்களை பொறுத்துக்கொள்ளுங்கள், அவற்றை ரசிக்கத் தொடங்குங்கள். நீங்கள் ஒரு கட்டத்தில் அதை ஒரு இன்பமாக உணருவீர்கள் ... " என்று அந்தப் பெண் முடித்தார்.


கணவர் சாப்பிட்ட தட்டை கழுவாமல் போகும்போது, டீ கப்பை அப்படியே வைத்துவிட்டுப் போகும் போது., தலை துவட்டிய ஈரத்துண்டை கட்டிலில் போட்டுச் செல்லும்போது, அவையெல்லாம் பெரிய தொந்தரவாகவே இருக்கும். ஆனால் ஒரு நாள் அதுவே உங்களுக்கு அற்புதமான நினைவாய் தெரியும். அதை திரும்ப அடைய முடியாதா? என மனம் ஏங்கும்.

அதேபோல் ரசத்தில் அடிக்கடி உப்பு போடுவதை மனைவி மறந்து போவதை, உங்கள் வெள்ளை சட்டையில் சாயம் பட்டுவிடுவதை, வெளியே கிளம்புவதற்கு தாமதமாவதை ஒரு சிக்கலாக கருதாதீர்கள். அவை எல்லாம் சிக்கல்கள், பலவீனங்கள் அல்ல. வாய்ப்புகள் மட்டுமே. நாம் விரும்பும் ரம்மியமான உலகம் நம்மிடம் இல்லையென்றாலும், நாம் பெறும் உலகில் மகிழ்ச்சியைக் காண முடியுமென்றால் வெற்றியை அடைவது அத்தனை சிரமமாக இருக்காது.

வாழ்வை மீட்டிக் கொள்ள முயற்சிப்பதற்குப் பதிலாக, நாமே நம்மை சோகத்தில் ஆழ்த்தி, அதிக தோல்வியை அனுபவிக்கிறோம். வாழ்வை போர்க்களமாக மாற்றிவிடுகிறோம்.

எனவே பலவீனங்களும் மிகவும் அழகானவை, அர்த்தபூர்வமானவை... அதனை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனம்தான் வேண்டும்.

# கவித்துவம்



மூச்சு வாங்கும்
போதெல்லாம்
பிறக்கிறேன்
வெளியிடும்
போதெல்லாம்
இறக்கிறேன்
ஒரே பிறவியில்
எனக்கு
எத்தனை பிறவிகள்.

-அப்துல் ரகுமான்



www.gyanaguru.com

# அதிர்ஷ்ட மீன்கள் சிரிக்கும் புத்தர்

## வாஸ்து வஸ்துக்களா..?!

திருப்பரங்குன்றம் தெருக்களை வலம்வந்த ஞானகுரு ஓய்வுக்காக ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்தார். ஞானகுருவின் வருகையைப் பார்த்த எதிர்வீட்டு கோல்டு ஃபிரேம் கண்ணாடி மனிதர், பவ்யமாக வணங்கி நின்றார்.

”சாமி... அடியேனை ஆசிர்வாதம் செய்யணும்...” என்று சட்டென காலைத் தொட்டு வணங்கினார்.

கண்ணாடிக்காரருக்கு ஏதோ அவசியத் தேவை இருக்கிறது என்பது அவரது செயலில் புரியவே, “சொல்லுங்கள்... என்ன பிரச்னை?’’ என்று அதிகாரத் தோரணையில் கேட்டார் ஞானகுரு.

”வழக்கமா எங்க குருஜி ஒருவர் மலையில் இருப்பார். அவரிடம்தான் என் மனபாரத்தை இறக்கி வைப்பேன். ஆனா, ஒரு வாரமா அவர் போன இடமே தெரியலை. என் பிரச்னையை யாரிடம் கொட்டித் தீர்ப்பது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில், கடவுளாய் பார்த்து உங்கள் தரிசனம் கிடைக்கச் செய்திருக்கிறார்...” என்றார்.

அப்போது அங்கே வந்த ஒரு பெரியவர் ஞானகுருவுக்கு கோல்டு ஃபிரேமை அறிமுகம் செய்துவைத்தார். ‘’சாமி... இவர் ராஜரத்னம் ரொம்ப வசதியானவர். இந்தப்பக்கம் மக்களுக்கு நிறைய உதவி செய்றார், வெள்ளிக்கிழமையானா கோவிலுக்கு வந்து எல்லோருக்கும் கைநிறைய காசு கொடுப்பார், சாப்பாடு போடுவார்” என்றார்.

உடனே ராஜரத்னம்.. “சாமி... எதிரே இருப்பதுதான் என் வீடு. தயவு பண்ணி என் வீட்டுக்கு வரணும்...” என்று வேண்டு கோள் வைத்தார். அப்போதுதான் எதிரே நின்ற புத்தம்புது பங்களாவை ஞானகுரு முழுமையாகப் பார்த்தார். எந்த யோசனையுமின்றி, எழுந்து அவருடன் வீட்டுக்குள் நுழைந்தார்.

ஞானகுருவை மனைவியிடம் அறிமுகப் படுத்தி வைத்தார். பால், பழம் கொடுத்து உபசரித்தார். எதையும் தொட்டுப் பார்க்காமல் அமைதி காத்தார் ஞானகுரு. மனைவியை வீட்டுக்குள் போகும்படி சைகை கொடுத்த ராஜரத்னம், ”சாமி... எனக்கு என்ன பிரச்னைன்னா..” என்று ஆரம்பித்தவரை, கண்களால் தடுத்து நிறுத்தினார் ஞானகுரு.

“இந்த வீடுதானே உன் பிரச்னை...” என்று ஞானகுரு கேட்டதும், ராஜரத்னம் ஆடிப்போய் விட்டார். குடும்பப் பிரச்னை அல்லது தொழில் பிரச்னை என்றால் வீட்டிற்கே வம்படியாக கூட்டி வந்திருக்க மாட்டார் என்பது சிம்பிள் லாஜிக். அதற்கே அசந்து போயிருந்தார் ராஜரத்னம். உடனே பிரச்னையைக் கூறினார்.

ஊரிலேயே பிரபலமான ஜோதிடரின் வாஸ்து ஆலோசனை கேட்டே பிரமாண்டமாக இந்த பங்களாவைக் கட்டியிருக்கிறார். வீட்டைக் கட்டி முடிக்கும்வரை எந்த சிக்கலும் இல்லை. ஆனால் இங்கு குடி வந்ததில் இருந்து எல்லோருக்கும் ஏதோ மனக்குறை, உடல் குறை. வியாபாரத்திலும் லாபம் குறைந்திருக்கிறது.

கடந்தவாரம் இந்த வீட்டிற்கு ஒரு பூஜைக்காக வந்த ஒரு பிரபல குருக்கள், ‘வீடு வாஸ்துவில் கோளாறு இருக்கிறது, ஆபத்து வருவதற்கு முன் சரிசெய்துவிடு’ என்று எச்சரித்துப் போனாராம். அன்று முதல் மனசு தடுமாறியிருக்கிறது. எனவே, மீண்டும் பழைய வீட்டிற்கே போய்விடலாமா என்பதை கேட்டுத் தெளிவுபடுத்தவே ஆசைப்பட்டு அழைத்து வந்திருக்கிறார்.

வீட்டை நன்றாக சுற்றிப் பார்த்தார் ஞானகுரு. வீடு பெரியபெரிய ஜன்னல்களுடன் கட்டப்பட்டிருந்தது. ஆனால் வீட்டிற்குள் வெளிச்சம் வராதவகையில் ஜன்னல்கள் மூடி வைக்கப்பட்டிருந்தன. முதலில் அனைத்தையும் திறந்து வைக்கச் சொல்லிவிட்டு பங்களாவின் வெளியே இருக்கும் புல்வெளிக்குப்



www.gyanaguru.com

போனார். ராஜரத்தினமும் ஆட்டுக்குட்டி போல் பின் தொடர்ந்தார்.

”ராஜரத்னம்... வேலை விஷயமாக அல்லது சுற்றுப்பயணமாக எந்த ஊருக்குப் போனாலும், சில தினங்களிலேயே அந்த ஊர் அலுப்புத்தட்டி சொந்த ஊருக்குத் திரும்பும் ஏக்கம் அனைவருக்கும் வந்துவிடும். சொந்த ஊருக்குத் திரும்பி, சொந்த வீட்டில், தனது அறையில் படுத்தபின்னர்தான் அக்கடாவென்று திருப்தியாக இருக்கும். அந்த நிம்மதியை அனுபவித்திருக்zகிறாயா...?”

”ஆமாம் சாமி...” தலையாட்டினார்.

”திருமணமான புதுப்பெண்ணுக்கு மாமியார் வீடு பழகிப்போக சில மாதங்களாவது ஆகும். அதுபோலவே உங்களுக்கும் இந்த வீடு இப்போது கண்ணாமூச்சு காட்டுகிறது. தொடர்ந்து நீங்கள் இங்கு புழங்கும்போது, இந்த வீடும் உங்கள் அங்கமாக மாறிவிடும்...” என்றார்.

”நீங்க சொல்றது சரிதான் சாமி... வீட்டைச் சுத்திப் பார்த்தீங்க, வாஸ்து குறை இருக்கான்னு சொல்லலையே...” என்று கேட்டார்.

''பிரபலமான வாஸ்து ஜோதிடரின் ஆலோசனைப்படிதானே வீட்டைக் கட்டினீர்கள்? பின் எதற்காக இன்னொருவர் சொன்னதும் குழப்பம்?”

”சாமி... ஜோதிடம் என்பது முழு உண்மை. ஆனால் சில ஜோதிடர்கள் சரியாகக் கணிக்காமல் தப்பு செய்துவிடுவது சகஜம்தானே. அப்படி இந்த வீட்டின் வாஸ்து தவறாகக் கணிக்கப்பட்டு விட்டதாக அந்தக் குருக்கள் சொன்னார்...”

''ஜோதிடம் உண்மையான கணக்கு என்றால், யார் அந்தக் கணக்கைப் போட்டாலும் சரியான விடை மட்டுமே வரவேண்டும். ஆளுக்கொரு விடை வருகிறது என்றால்...? அது கணிதமும் அல்ல, உண்மையும் அல்ல. உன்னுடைய பழைய வீடு கட்டி எத்தனை வருடங்கள் ஆகிறது... அதை வாஸ்து பார்த்துக் கட்டினீர்களா?”

“அது எப்படியும் இருபது வருஷத்துக்கு மேல இருக்கும், அப்போ வாஸ்து எல்லாம் பார்க்கலை...” என்றார்.

”ஏன்?”

”அப்ப வாஸ்து பத்தி எனக்கு எதுவுமே தெரியாது சாமி...”

”உண்மைதான்... அப்போது உன்னிடம் நிறைய பணம் இருக்கவில்லை, அதனால் வாஸ்து பற்றி நீ கவலைப்படவில்லை. வீடு கட்டும்போது பூமி வலுவாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். காற்றோட்டம், தண்ணீர், வாகனங்கள் நிறுத்த இடம், புழங்குவதற்கு தாராள இடம், பாதுகாப்பு போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலே போதுமானது. எந்த ஒரு வீட்டையும் திசைகள் கட்டுப்படுத்தாது.



உன் வீட்டின் மேற்குச் சுவர் என்பது, அண்டை வீட்டுக்காரனுக்கு கிழக்குச் சுவராக இருக்கிறது. ஒரே சுவர் உனக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுப்பதாகவும், அண்டை வீட்டுக்காரனுக்கு கெடுதல் செய்வதாகவும் எப்படி இருக்கமுடியும்? இந்த உலகம் உருண்டை எனும்போது எப்படி நான்கு திசைகள் இருக்க முடியும்......”

எதுவும் பேசாமல் அமைதியாக இருந்த ராஜரத்னம், “அப்படின்னா பரிகாரம் மட்டும் செஞ்சா போதுமா?” என்று இழுத்தார்.

”வாஸ்து என்பது வீடு கட்டும் முன்னர் நீ ஜோதிடனை நம்புவதற்காகத் தரும் விலை. வாஸ்து பரிகாரங்கள் மேலும் சில ஜோதிடர்களின் வாழும் கலை. சிரிக்கும் புத்தரோ, அதிர்ஷ்ட மீன்களோ, தண்ணீர் பூக்களோ ஏன் திசைகளோகூட உன் வாழ்வைத் தீர்மானிக்க முடியாது. இவற்றால் கடைக்காரனுக்கு லாபம் வரலாம், உனக்கு ஒரு பொய்யான நிம்மதி கிடைக்கலாம்... அவ்வளவுதான்” என்றார்.

”ஆனா... இந்த வீட்டுக்கு வந்தபிறகுதானே...” என்று லேசாக இழுத்தார்.

”நீண்ட காலமாக திருமணம் முடியாதவர்கள் நாலைந்து வருடமாக ஒவ்வொரு திருத்தலமாக போய் பரிகாரம் செய்து வருவார்கள். ஏதாவது ஒரு திருத்தலம் சென்று வந்த நேரத்தில் திருமணம் முடிவாகும். உடனே, ‘எல்லாம் அந்த குறிப்பிட்ட திருத்தல மகிமைதான்’ என்பார்கள். அப்படியென்றால் அதுவரை அவர்கள் சென்று வந்த அத்தனை திருத்தலங்களும் மகிமை இல்லாதவையா? நடக்க வேண்டியவை அதனதன் நேரத்தில் நடந்து கொண்டே இருக்கும். உன் குடும்பத்தாரின் உடல்நிலை, வியாபாரம் போன்றவற்றை இந்த வீட்டோடு முடிச்சுப் போடாதே... ஆனாலும் உனக்கு திருப்தி கிடைக்கவேண்டும் என்றால், 21 நாட்கள் இரவு படுக்கப்போகும் நேரத்தில், வீட்டின் நான்கு மூலைகளிலும் கற்பூரம் ஏற்றி வை. தீய சக்திகள் எதுவும் உள்ளே நுழையவே முடியாது” என்றேன். இந்த எளிய பரிகாரம் ராஜரத்னத்துக்கு மிகுந்த திருப்தியை கொடுத்தது அவரது கண்களில் தெரிந்தது.

மனிதனுக்குத் தேவை உண்மையல்ல. எளிமையான தீர்வுகள்தான். கற்பூரம் ஏற்றுவதால் எதுவும் நடக்காது என்றாலும், அதைத்தான் தீர்வாகச் சொன்னார் ஞானகுரு. ராஜரத்னத்தின் நிம்மதியைப் பார்த்து சிரித்தார் ஞானகுரு.

www.gyanaguru.com



# அயோக்கியர்கள்

## நன்றாக வாழ்கிறார்களே..?



ஆசிரமத்தை ஞானகுரு துடைப்பம் கொண்டு சுத்தம் செய்துகொண்டிருந்த நேரத்தில், ஒரு குடும்பஸ்தன் அமைதியாக வந்து நின்றார். தன்னுடைய வேலை முழுமையாக முடிந்ததும் அவனிடம் வந்தார் ஞானகுரு.

“என்னுடைய பெண்ணுக்கு திருமணம் நடத்தவேண்டும். நல்ல இடம் வந்திருக்கிறது. ஆனால், அதிக நகை கேட்கிறார்கள். என்னால் கொடுக்க முடியாமல் தவிக்கிறேன். ஆனால், பக்கத்து வீட்டில் வசிக்கும் ஒருவன் தவறான தொழில் செய்கிறான். தெளிவாக சொல்வது என்றால் கஞ்சா விற்பனை செய்கிறான். மிகுந்த செல்வத்தில் புரளுகிறான். சந்தோஷமாகவே இருக்கிறான். இத்தனை நாட்களும் நேர்மையாக இருந்த நான் ஒரு திருமணம் முடித்துவைக்க சிரமப்பட, அவனோ கவலையே இல்லாமல் சந்தோஷமாக இருக்கிறான். ஏன் இப்படி நடக்கிறது..? நானும் தவறான தொழில் செய்து பணம் சம்பாதிக்கலாமா..?”

ஞானகுரு அவரது தோளில் கை போட்டபடி பேசினார்.

“சட்டத்துக்குப் புறம்பாக தொழில் செய்பவன் லட்டு சாப்பிடுவதை நீ பார்க்கிறாய். அதேநேரம் அவன், சிறையில் களி சாப்பிடவும் தயாராக இருக்க வேண்டும். வன்முறை கும்பலிடம் சிக்கி உயிர் விடவும் வாய்ப்பு உண்டு. எந்த நேரமும் மரணத்தின் வாசலில் அமர்ந்திருக்கும் காரணத்தால், இருக்கும் நேரத்தை எல்லாம் கொண்டாட்டமாகக் கழிக்கிறான். நாளை அவனுடைய மகள் திருமணத்திற்கு தயாராக இருக்கும்போது அவன் இதேபோன்று செல்வத்துடன் இருப்பானா அல்லது சிறையில் கைதியாக இருப்பானா என்று சொல்ல முடியாது.

பணத்தால் எல்லாவற்றையும் வாங்கிவிட முடியாது. விலை உயர்ந்த மருந்தை வாங்கலாம், ஆரோக்கியத்தை வாங்க முடியாது, மெத்தையை வாங்கலாம் தூக்கத்தை வாங்க முடியாது, புத்தகத்தை வாங்கலாம் புத்தியை வாங்க முடியாது, கூட்டத்தை வாங்கலாம் நண்பர்களை வாங்க முடியாது, வேலைக்காரர்களை வாங்கலாம் விசுவாசத்தை வாங்க முடியாது.

உன்னுடைய மகள் ஒரே நாளில் திருமணத்துக்குத் தயாராகவில்லை. அவள் திருமணத்துக்கு எத்தனை நகை வேண்டுமோ அதை உன் சம்பாத்யத்தில் சேர்த்து வைக்காதது உன் தவறு. அப்படி சேர்க்க முடியவில்லை என்றால், உன்னிடம் இருக்கும் பணத்துக்குத் தகுந்த மாப்பிள்ளையைப் பார். அதுதான் சரியான பார்வை. அதை மறந்து,சட்டத்துக்குப் புறம்பான வழியில் இறங்கிவிடாதே, அப்புறம் உன் மகள் திருமணத்தைக்கூட உன்னால் பார்க்க முடியாமல் போய்விடலாம்.

நேர்மையாக இருப்பதற்கு கடவுள் எந்த வெகுமதியும் கொடுக்க மாட்டார். நீ நேர்மையாக வாழும் வாழ்க்கையை ஒரு வெகுமதியாக எடுத்துக்கொண்டு சந்தோஷம் அடைய வேண்டும். சட்டத்துக்குப் புறம்பாக சம்பாதிக்கும் நபர்கள் ஆடம்பரமாக வாழ்வது வெளி உலகத்திற்குத் தெரியும், அவர்கள் சந்தோஷமாக அல்லது நிம்மதியாக வாழ்கிறார்களா என்பதை நீ எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?” பதில் கேள்வியுடன் நிறுத்தினார் ஞானகுரு.

தெளிவுடன் திரும்பினார் குடும்பஸ்தன்.


www.gyanaguru.com

# மகிழ்ச்சி பரப்ப வாருங்கள்....







இன்று நம் மக்களுக்கு உணவு முதல் பொழுதுபோக்கு வரை எல்லாமே எளிதாகக் கிடைக்கிறது. ஆனால், மகிழ்ச்சியும் நிம்மதியும் தான் கிடைப்பதாக இல்லை. ஒரு புத்தகம் அல்லது உரையாடல் மூலம் யாருக்கும் முழு மகிழ்ச்சியைக் கொடுத்துவிட முடியாது என்றாலும், அதனை நோக்கி நகர முடியும். அதற்கான ஒரு முயற்சியாகத்தான், 'ஞானகுரு மகிழ்ச்சி' மாத இதழும், gyanaguru.com இணையதளமும் இயங்கிவருகின்றன.

வணிக நோக்கமற்று செயல்பட்டுவரும் இந்த இதழும் இணையமும் தொடர்ந்து செயல்படுவதற்கு நீங்களும் உதவி செய்ய முடியும். இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும் ஒவ்வோர் இதழையும் பகிருங்கள், அவர்களையும் பகிரச் செய்யுங்கள்.

மேலும், இந்த இதழுக்கு ஏற்ப உங்களுடைய சொந்த படைப்புகளை அனுப்பிவையுங்கள். தகுதியிருப்பின் அவை உங்கள் பெயரில் பிரசுரம் செய்யப்படும்.

இதுதவிர, நீங்கள் விரும்பும் ஏதேனும் ஒரு சிறு தொகையை அன்பளிப்பாக கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கு ஜிபே மூலம் அல்லது கீழ்க்கண்ட வங்கி எண்ணுக்கு அனுப்பிவைக்கலாம். இது மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சி தரும்.

GPAY : +91 98 8445 3014
GHANAGURU PUBLICATION, CITY UNION BANK,
CURRENT ACCOUNT No. : 036109000092054,
IFSC : CIUB0000036.



www.gyanaguru.com

www.gyanaguru.com



# 8 போட்டு நடந்தால் என்னாகும்..?

மரத்தின் கீழே உதிர்ந்துகிடந்த இலைகளை கைகளில் எடுத்து தடவிக்கொடுத்தார் ஞானகுரு. அப்போது வந்து சேர்ந்த மகேந்திரன், ‘சாதாரண நடைபயிற்சி செய்வதைவிட, 8 போட்டு நடப்பது மிகவும் உற்சாகம் தருகிறது. இதை ஏன் நீங்கள் கற்றுத்தருவதில்லை?’ என்று கேட்டார்.

‘எதற்காக எட்டு போட்டு நடக்க வேண்டும்..?’ சந்தேகம் கேட்டார் ஞானகுரு.

‘’அட, உங்களுக்கு இது தெரியாதா? இதுதான் சித்தர்கள் காட்டிய வழியாம். இந்த பயிற்சியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அல்லது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செய்யவேண்டும். 15வது நிமிட முடிவில் இருநாசித்துவாரங்களின்

மூலம் உள்ளிழுக்கப்பட்ட முழு மூச்சுக்காற்றையும் உணரலாம். பின்னர் நடைப்பயிற்சியானது மேலும் 15 நிமிட நேரம் தொடர வேண்டும். அப்படி நடக்கும்போது மார்புச்சளி தானாகவே வெளியே காரி உமிழும் வகையில் அல்லது கரைந்து இறங்குவதை உணரலாம்.

இந்த பயிற்சியை தொடர்ந்து செய்து வந்தால் உள்ளங்கை விரல்கள் ரத்த

ஓட்டத்தினால் சிவந்திருப்பதை உணரலாம். முதுமை இளமையாகும்.. சர்க்கரை வியாதி குறைந்து முற்றிலும் குணமடையும். குளிர்ச்சியினால் ஏற்படும் தலைவலி, மலச்சிக்கல் தீரும். கண்பார்வை அதிகரிக்கும், ஆரம்பநிலை கண்ணாடி அணிவது தவிர்க்கப்படுகிறது. செவிகளின் கேட்கும் திறன் அதிகரிக்கிறது. குடலிறக்கநோய் குணமாகும். அளவான நடைப்பயிற்சியால் ரத்த அழுத்தம் குறைக்கப்படுகிறது.

தினமும் இரண்டுவேளை 30 நிமிடம் செய்தால், பாத வெடிப்பு, வலி, மூட்டு வலிகள் மறைந்து விடுகின்றன.. உடல் பருமன், இரத்த அழுத்தம், இதய நோய், ஆஸ்துமா, கண் நோய்கள், மூக்கடைப்பு, தூக்கமின்மை, மூட்டுவலி, முதுகுவலி, மன இறுக்கம், போன்ற கொடிய நோய்கள்கூட மெல்ல மெல்ல பூரணமாக குணமாகி விடும். அதனால்தான் 8 போட்டு நடப்பது இப்போது பிரபலமாகி வருகிறது” என்று சொல்லி முடித்தார் மகேந்திரன்.

‘’அடேங்கப்பா... சர்வரோக நிவாரணியாக இருக்கிறதே... நீ சொல்வதைப் பார்த்தால், எல்லா மருத்துவமனைகளையும் இழுத்து மூடிவிட்டு, அங்கெல்லாம் மனிதர்களை 8 போட்டு, நடக்கவிட்டால் போதும்” என்று சிரித்தார்.

‘’சும்மாவா சொல்லுவாங்க... நிஜமாவே நிறைய பேருக்கு பலன் கிடைச்சிருக்கு..”

‘’அதுசரி, உனக்கு பலன் கிடைத்ததா..? இது எந்த சித்தர் சொன்ன தத்துவமாம்..?”

‘’எந்த சித்தர் சொன்னது என்று தெரியவில்லை. எனக்கு இப்போது புத்துணர்ச்சி கிடைத்துள்ளது என்பது மட்டும் நிஜம். மற்ற நோய்களும் விரைவில் குணமாகிவிடும்” என்று நம்பிக்கை தெரிவித்தார்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. ‘’முன்னோர் சொன்னது என்றாலும் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ளாதே. மனிதனின் கால்கள் நேராக நடப்பதற்கும், ஓடுவதற்கும் ஏற்ப படைக்கப்பட்டுள்ளன. எனவே, அதில் தேவையற்ற குழப்பத்தை உருவாக்காதே. நீ எட்டு போட்டு நடந்தால், நிச்சயம் உன்னுடைய முழங்கால் ஜவ்வுக்கு சிக்கல் ஏற்பட்டுவிடும். எலும்பு மருத்துவர் ஒருவரிடம் இதனை கேட்டு உறுதிப்படுத்திக் கொள். யார் என்ன சொன்னாலும், அப்படியே ஏற்றுக்கொள்வதை விடு. நேராக நடந்து வீட்டுக்குச் செல்” என்று உத்தரவு போட்டார் ஞானகுரு.

உறைந்து நின்றார் மகேந்திரன்.

# மரணம் எனும் புன்னகை..!

முதியவர்கள் பெரும்பாலும் சோகத்துடன் இருப்பதைக் காணமுடியும். அவர்களிடம் கொஞ்சநேரம் மனம்விட்டு பேசிப் பார்த்தால், அதற்கான காரணங்களை அவர்களே சொல்வார்கள்.

அதாவது, ‘இத்தனை காலமும் வாழ்க்கை என்றால் என்னவென்று புரியாமல் பணத்தைத் தேடி, காலத்தை எல்லாம் வீணாக்கிவிட்டேன். இப்போதுதான் எது உண்மையான வாழ்க்கை என்பது புரிகிறது. எல்லோருடனும் பாசத்துடனும், நேசத்துடனும் பழக ஆசையாக இருக்கிறது. ஆனால், உடலுக்கு நோய் வந்துவிட்டது. எந்த நேரமும் மரணம் வந்துவிடும் போல் இருக்கிறது.

நிறைவாக வாழவில்லையே என்பதுதான் என் கவலையாக இருக்கிறது. இனியாவது, எல்லோருக்கும் பிடித்தவராக, எல்லோருக்கும் நல்லவராக வாழவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால், மற்றவர்களுக்கு என்னிடம் பேசுவதற்குப் பிடிக்கவில்லை, நேரமும் இல்லை. எனக்கு எந்த வகையில் மரணம் நேரப்போகிறதோ என்பதுதான் எனக்கான பயமாக இருக்கிறது. சட்டென்று தூக்கத்திலேயே செத்துவிட வேண்டும். படுக்கையில் விழுந்து எல்லோரும் என்னை பாரமாக நினைக்கும் அவமானம் நிகழ்ந்துவிடக் கூடாது’ என்பதுதான் அவர்களின் கவலைக்கு காரணமாக இருக்கும்.

வாழ்ந்தது போதும். நான் நல்லபடியாக வாழ்க்கை நடத்தியிருக்கிறேன் என்ற மனப்பான்மை பெரும்பாலோருக்கு வருவதில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால், அவர்கள் வாழும் காலத்தில் மரணத்தைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்கவே இல்லை என்பதுதான். அதனால், மரண பயம்தான், அவர்களை சோகமாக்குகிறது.

எனவே, ஒவ்வொரு மனிதரும் இளமையிலே மரணம் பற்றி தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், வாழ்க்கையைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

- பிறப்பு என்பது மனிதனுக்கு சிறை. மரணம் என்பது மனிதனுக்குக் கிடைக்கும் சுதந்திரம். எனவே, மரணத்தை வரவேற்கும் பக்குவம் ஒவ்வொரு கணத்திலும் இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு நாள் தூங்கி விழிப்பதும், புதிய ஜனனம். அன்றைய உறக்கம் ஒரு மரணம் என்று நம்ப வேண்டும்.
- தங்கள் உடல் மீதும், நெருக்கமான உறவுகள் மீதும், சம்பாதித்த பணம், சொத்துக்கள் மீது பற்று வைக்கும்போது, மரணம் எதிரியாகத் தெரியும். எனவே, நிலையற்ற உடல் மீதும், உறவுகள் மீதும், பணத்தின் மீதும் வைத்திருக்கும் பாசத்தை விலக்க வேண்டும்.
- எப்பேர்ப்பட்ட ஞானி என்றாலும், எத்தனை பெரிய கோடீஸ்வரர் என்றாலும், எத்தனை பெரிய அரசியல் தலைவர் என்றாலும், அவரை மரணம் விட்டுவைப்பதில்லை. எனவே மரணத்துக்கு அஞ்சுவதால் ஆகப்போவது எதுவும் இல்லை.
- நல்லவன், கெட்டவன், நோயாளி, ஆரோக்கியமானவன், முட்டாள், அறிவாளி என மரணம் யாருக்கும் பாகுபாடு பார்ப்பதில்லை.
- எந்த முன்னறிவிப்பும் இன்றி, எந்த நொடியிலும் மரணம் நிகழ்வதற்கு வாய்ப்பு உண்டு. உன் பக்கத்து இருக்கை பயணியாகவே மரணத்தை நினைத்துக்கொள்.
- பயப்படுவது, கவலைப்படுவது அல்லது ஆராதனை செய்வதன் மூலம் மரணத்தை ஒருவராலும் வெற்றியடைய முடியாது.
- புரிந்துகொள்ளாதவர்களையே மரணம் மிகவும் பயமுறுத்துகிறது. எனவே, மரணத்துக்காக காதலுடன் காத்திரு. மரணமும் புன்னைகைப் பூவாகத் தெரியும்.



www.gyanaguru.com

www.gyanaguru.com



# பிள்ளைகளை சரியாகத்தான் வளர்க்கிறோமா..?

தான் வாழ்க்கையில் அனுபவித்த மோசமான அனுபவங்கள், தன்னுடைய பிள்ளைகளுக்கு ஒருபோதும் கிடைத்துவிடக் கூடாது என்பதுதான் ஒவ்வொரு பெற்றோரின் கனவாகவும் இருக்கிறது. கூலி வேலை பார்ப்பவராக இருந்தாலும், கோடீஸ்வரராக இருந்தாலும், அவருடைய பிள்ளையை முடிந்த வரையிலும், எந்த துன்பமும் நெருங்காமல் வளர்க்கவே விரும்புகிறார்கள். தோழன் அல்லது தோழி எனும் அளவுக்கு பிள்ளையுடன் நெருங்கி உறவாடவே பெற்றோர் ஆசைப்படுகிறார்கள். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராகவும் இருக்கிறார்கள்.

ஆனால், பெற்றோர் எப்போதும் பெற்றோராகத்தான் இருக்க வேண்டும், அவர்கள் ஒருபோதும் நண்பராக மாறக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறார் இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி. அவரது நண்பரது அனுபவத்தை பதிவு செய்திருக்கிறார் நாராயணமூர்த்தி. இதுதான் அந்த பதிவு.

.’பணி முடிந்து வெகு தொலைவு பயணம் செய்து களைப்புடன் திரும்பிய நான் என் மனைவியை கடும் காய்ச்சலுடன் படுக்கையில் படுத்திருக்கக் கண்டேன். எனக்காக அந்த ஜுரத்திலும் சமையல் செய்து உணவை ட்ரேயில் வைத்து மூடி வைத்திருந்தாள். நான் வழக்கமாக உண்ணும் எல்லாவற்றையும் சமைத்து வைத்திருந்தாள். அவளுக்குத் தான் என் மேல் எவ்வளவு கரிசனம். உடல் நலம் சரியில்லாத நேரத்தில் கூட எனக்காக சமைத்து வைத்திருக்கிறாளே.

சாப்பிட அமர்ந்த பின் தான் ஏதோ குறைவதை உணர்ந்தேன். டிவி பார்த்துக் கொண்டிருந்த என் வளர்ந்த மகளிடம், ‘ செல்லம் என் மாத்திரையையும் தண்ணீரும் எடுத்துக் கொண்டு வா” என்று கூறினேன். அவளை நான் தொந்தரவு செய்ததை விரும்பவில்லை என்பதுபோல் கண்ணை உருட்டி அதிருப்தியைத் தெரிவித்து விட்டு நான் கேட்டதைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

சாப்பிட அமர்ந்ததும், சாம்பாரில் உப்பு குறைவாக இருந்ததால் அவளை எடுத்துக் கொண்டு வரப் பணித்தேன். அவள், ச்சே என்று கூறிக்கொண்டே காலை அழுத்தமாக உதைத்து நடந்துபோய்க் கொண்டு வந்து கொடுத்தாள். நான் அவளைத் தொந்தரவு செய்ததை அவள் விரும்பவில்லை என்று எனக்குத் தெரிந்தது.

நான் சில நிமிடம் கழித்து மீண்டும், செல்லம் என்று அழைத்த போது அவள் கையில் இருந்த டிவி ரிமோட்டை பட்டென்று மேஜை யில் வைத்து விட்டு,ம் ‘அப்பா உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்? எத்தனை முறை என்னை எழுப்புவீர்கள்? நானும் நாள் முழுதும் வேலை பார்த்து விட்டு வந்திருக்கிறேன். எனக்கு களைப்பாகத்தான் இருக்கிறது’ என்று கூறினாள். நான் ஸாரிம்மா என்று சொல்லி விட்டு சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து சமையலறை

www.gyanaguru.com
www.gyanaguru.com

> ❝ கொஞ்சம் விலகியே இரு. எல்லோருக்கும் நல்லவராக இருக்க முடியும். எல்லோரும் நல்லவராக இருப்பார்கள். ❞

## மந்திரச்சொல்





சிங்கில் போட்டுவிட்டு என் கண்களில் இருந்து உருண்டோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

என் இதயம் அழுதது. நான் அவ்வப்போது எனக்குள் கேட்டுக் கொள்ளும் கேள்வி இதுதான். இந்தக் கால இளைய தலைமுறையினர் ஏன் இது போல் நடந்து கொள்கிறார்கள்? நாம் அவர்களுக்கு அளவுக்கு அதிகமாக சுதந்திரம் கொடுத்தது தவறோ? அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுக்கத் தவறி விட்டோமோ? நாம் அவர்களை நண்பர்கள் போல் நடத்தியது தவறோ? அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைப்பார்கள். ஆனால் பெற்றோர்கள் நாம் மட்டும்தானே? பெற்றோருக்கான கடமையை நாம் செய்யாவிட்டால் வேறு யார் செய்யப் போகிறார்கள்?

இன்று பிறந்த குழந்தைக்குக் கூட சுயமரியாதை இருப்பதைப் பற்றிக் கவலைப் படுகிறது இந்த உலகம். ஆனால் பெற்றோர்களுக்கு மட்டும் சுயமரியாதை இல்லையா? அவர்கள் தங்கள் குழந்தைகளின் ஈகோக்களை வளர்த்து விட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா? இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள் கூறுவது இதைத்தான். இந்தக் காலத்தில் எந்தக் குழந்தைகள் பெற்றோருக்குக் கீழ்படிகிறார்கள்?

இதற்குக் காரணம் என்ன?

இதேபோல் தான் அன்று ஒரு பார்ட்டியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது என் 50 வயது நண்பர் தன் கார் சாவியை மறந்து போய்க் காரிலேயே விட்டு விட்டு வந்து விட்டதால் தன் டீன் ஏஜ் பெண்ணை எடுத்துக் கொண்டு வரப் பணித்தார். அவளோ, 'நான் என்ன உனக்கு வேலைக்காரியா? நீயே போய் எடுத்துக் கொள்" என்றாள்.


அவரும் சிரித்துக்கொண்டே, 'இல்லைம்மா… நான் தான் உனக்கு வாழ் நாள் முழுவதும் சேவகன்' என்று கூறிக் கொண்டே போய் கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்தார். இதுவே இன்று சமுதாயத்தில் நடக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

நாம் நமது குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையைப் பற்றியும் சுயமரியாதையைப் பற்றியும் கற்றுக் கொடுக்க விரும்பினால் முதலில் இதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கை யில் எவ்வளவு பணக்காரர்களாகவும் புகழ் பெற்றவர்களாகவும் இருந்தாலும் அவர்களுடைய பெற்றோர்கள் என்றும் பெற்றோர்கள்தான்.

பெற்றோருக்கு நான் சொல்ல விரும்புவது, இதுதான். நீங்கள் உங்கள் குழந்தைகளை நண்பர்களாக நடத்தாதீர்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைக்கலாம். ஆனால் பெற்றோர்கள் நீங்கள் மட்டுமே. அதனால் அவர்களை நீங்கள் வளர்ப்பதற்கு விதிமுறைகளை வகுப்பதற்கும், அந்த விதிமுறைகளை அவர்கள் மதிப்பதற்கு அவர்களைக் கட்டாயப் படுத்துவதற்கும் ஒரு போதும் அஞ்சாதீர்கள்.

இப்போது சொல்லுங்கள்… நாம் பிள்ளைகளை சரியாகத்தான் வளர்க்கிறோமா..?







# கட்டுப்படுத்த முடியாததை, ஏற்றுக்கொள்..!

சூரிய அஸ்தமனத்தை ரசித்துக் கொண்டிருந்த ஞான குருவுக்கு, சில பழங்களைக் கொடுத்தார் மகேந்திரன். ”எனது நண்பன் ஒருவருக்கு புற்று நோய் வந்துவிட்டது. இதனை குணப்படுத்த எத்தனையோ மருந்துகள், சிகிச்சைகள் எடுத்துக்கொண்டே இருக்கிறார். வலியும், வேதனையும் அதிகரிக்கிறதே தவிர, தீர்வு தென்படவில்லை. இப்போது அவர் என்ன செய்யவேண்டும்..?” என்று கேட்டார்.

”வாழ்க்கையில் எல்லா விஷயங்களும் மனிதரின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. ஒரு பஸ்ஸில் பயணம் செய்யும்போது, நீ டிரைவரை நம்பித்தான் பயணம் செய்ய வேண்டும். அவர் ஏதேனும் தவறு செய்து விபத்து ஏற்பட்டால், எந்த தவறும் செய்யாத நீயும் அதன் பலனை அனுபவித்தே தீர வேண்டும். இதை உன்னால் மாற்ற முடியாது.

இனிமேல் நஷ்டம் வருவதற்கு வாய்ப்பே இல்லை என்ற அளவுக்கு வியாபாரம் நடக்கும்போது திடீரென கொரோனா வைரஸ் போன்ற சூழல் ஏற்பாடு ஒட்டுமொத்த வியாபாரமும் இழுத்துமூட வேண்டிய நிலைமை ஏற்படலாம். இதுபோன்று வாழ்க்கை முழுவதும் நன்மையும், தீமையும் எதிர்பாராமல் நடந்துகொண்டேதான் இருக்கும். நமது கட்டுப்பாட்டில் இல்லாத விஷயங்களை அப்படியே ஏற்றுக்கொள்வது நல்லது.

புற்றுநோய் என்பது வாழ்க்கையின் முடிவு அல்ல. எனவே, நோய்க்கு சிகிச்சை எடுத்துக்கொள்வது எத்தனை முக்கியமோ, அந்த அளவுக்கு புற்று நோயை முழுமையாக ஏற்றுக்கொள்வதும் அவசியம். இதை நினைத்து வருந்துவது, அழுவது, புலம்புவது, பரிகாரம் செய்வதால் எந்த வகையிலும் பயன் தரப்போவதில்லை.

புற்றுநோய்க்கு சிகிச்சையை மகிழ்வுடனும் நம்பிக்கையுடன் எடுத்துக்கொள்ள வேண்டும். புற்றுநோயில் இருந்து மீண்டுவிட்டால் நல்லது மீளாவிட்டாலும் நல்லதே என்று ஏற்றுக்கொள். புற்று நோயினால் முடி கொட்டிவிட்டால், உன்னால் ஒரு விக் வைத்துக்கொண்டு வலம் வர முடியும். அதுதான் உன்னால் செய்யக்கூடிய மாற்றம்.

சரியான நேரத்துக்கு ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வதுதான் நீ செய்யக்கூடியது ஒன்று. ரயில் சரியான நேரத்துக்கு வராமல் போவதை உன்னால் எதுவும் செய்துவிட முடியாது. மழை பெய்யலாம் என்ற எண்ணத்தில் குடை கொண்டு போவது நல்லது. ஆனால், மழை பெய்வதும் பெய்யாமல் போவதும் உன் கையில் இல்லை.

ஆகவே, எதிர்பாராத மாற்றம் நிகழும்போது, கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியதை மாற்றுங்கள். கட்டுப்படுத்த முடியாதவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது உலகம் இன்னும் அழகாகத் தெரியும். ஒரு புற்று நோயாளியால்தான் ஒவ்வொரு பூவையும் ஒவ்வொரு உதயத்தையும் நன்கு ரசிக்க முடியும்” என்றார் ஞானகுரு.

வேதனையுடன் நின்றார் மகேந்திரன்.

# யார் இந்த பெரியார்

ஈ.வே.ராமசாமி எனும் பெரியார் என்றாலே மக்களுக்கு ஞாபகம் வருவது, அவரது கடவுள் மறுப்புக் கொள்கை மட்டும்தான். ஆனால், அது மட்டும்தான் அவரா..? பெரியாரைப் பற்றி அவரே எழுதிய சுய விளக்கம் இது. படித்துப் பாருங்கள்.

என்னைப் பற்றி பலரும் பலவிதமாகச் சொல்லி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மிகவும் பொல்லாதவன் என்றோ மிகப் பெரும் தலைவன் என்றோ சிலர் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும் அதை எல்லாம் பொருட் படுத்தாமல் உண்மையிலேயே நான் யார், நான் என்ன பேசினேன், என்ன எழுதினேன், என்ன சிந்தித்தேன், எதற்காகப் போராடினேன், எப்படி வாழ்ந்தேன் என்று நீங்களாகவே நேரடியாகத் தேடி அறிந்துகொண்டு, ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன்.

தேவை என்றுபட்டால் நான் சொன்னதில் எதையேனும் சிந்தித்துப் பாருங்கள். தேவை இல்லை என்று தோன்றினால் தாமதிக்காமல் ஒதுக்கிவிடுங்கள், என் வழியும் அதுதான்.

உங்கள் ஜாதி ஒரு மனிதனைத் தடுத்து நிறுத்தி, உன். அம்மா யார், உன் அப்பா யார், உன் தாத்தா, பாட்டி எல்லாம் யார், அவர்கள் பின்னணி என்னஎன்றெல்லாம் விசாரணை நடத்துகிறது. அதன் பிறகே அந்த மனிதனை மதிப்பதா வேண்டாமா என்று முடிவெடுக்கிறது.



www.gyanaguru.com

www.gyanaguru.com



# பெரியார்

> ஒரு மனிதனை மதிக்கத் தெரியாத எந்தத் தத்துவமும், எந்தக் கோட்பாடும், எந்தப் படைப்பும், எந்தக் கலையும், எந்த ஓவியமும், எந்தஇசையும், எந்தவழிபாடும், எந்தப் பண்பாடும், எந்தப் பெருமிதமும், எந்த வாழ்க்கைமுறையும் எனக்கு வேண்டாம்.

அப்படிப்பட்ட மோசமான ஜாதி என் பக்கத்தில் மட்டுமல்ல, எந்த ஒரு மனிதனுடைய பக்கத்திலும் நெருங்கி வரக் கூடாது என்பேன்.

உங்கள் மதம் இன்னொரு மதத்தை உளமாற வெறுக்கக் கற்றுக் கொடுக்கும் என்றால்; வேறு மதங்களை நம்புபவர் களையோ ஒரு மதத்தையும் நம்பாதவர் களையோ பழிக்கும் என்றால்; அப்படி ஒரு மதத்தைப்பின்பற்றுவதால்வரும்புண்ணியமோ பலனோ எனக்கு வேண்டாம் என்று அடித்துச் சொல்வேன்.

மற்றபடி எனக்கும் கடவுளுக்கும் எந்தக் கொடுக்கல் வாங்கல் சண்டையோ, பூர்வ ஜென்மத்துப் பகையோ இல்லை.

என் நாட்டில் சிலருக்கு மட்டும்தான் சுதந்திரம் உண்டு, வேறு சிலருக்கு இல்லை என்றால்; சிலரே இந்தியர்கள் வேறு சிலர் அந்நியர்கள் என்றால்; ஏழைகள் ஏழைகளாகவே நீடிப்பார்கள் என்றால்; பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட மாட்டார்கள் என்றால்; ஒருவரால் அச்சமின்றி எழுதவோ பேசவோ முடியாது என்றால்; இந்தக் குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டுவது தேச துரோகம் என்றால்; நான் என்ன செய்தாலும் நீ என் பக்கம் தான் நின்றாக வேண்டும் என்று என் நாடு என்னிடம் எதிர்பார்க்கும் என்றால்; அப்படியொரு நாட்டின் மீது எனக்குப் பற்று இல்லை என்பேன்.

என் மொழி அறிவை வளர்க்கிறதா? அறிவியல் சிந்தனையை ஊக்கப்படுத்துகிறதா? பரந்த மனத்தோடு உலகம் எங்கிலும் இருந்து வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்கிறதா? பதிலுக்கு எல்லோருக்கும் தன் கதவுகளைத் திறந்துவிடுகிறதா? வேறு பாடின்றி எல்லோரையும் அணைத்துக் கொள்கிறதா என்றெல்லாம் கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பேன். இல்லை என்று தெரிந்தால் அந்தக் கணமே என் மொழிப்பற்றை உதறிவிடுவேன்.

கோயிலில் சிலர் நுழையலாம், வேறு சிலர் நுழையக்கூடாது என்று சொன்னால், அப்படி ஓர் இடம் எனக்குத் தேவையில்லை என்று என் வழியில் போய்விடுவேன் .

கடவுளோ காந்தியோ நேருவோ அல்லது வேறொரு மகானோ, யாராக இருந்தாலும் ஒருவர் செய்வது தப்பு என்று என் மனது க்குப் பட்டால் தப்பு என்றே அடித்துச் சொல்வேன்.

மனிதர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பிற்போக்குத்தனமான கருத்து என்று தெரிந்துவிட்டால் அது எவர் வாயில் இருந்து வந்திருந்தாலும் அதை வலுவாக எதிர்ப்பேன்.

ஒரு மனிதனை மதிக்கத் தெரியாத எந்தத் தத்துவமும், எந்தக் கோட்பாடும், எந்தப் படைப்பும், எந்தக் கலையும், எந்த ஓவியமும், எந்தஇசையும், எந்தவழிபாடும், எந்தப் பண்பாடும், எந்தப் பெருமிதமும், எந்த வாழ்க்கைமுறையும் எனக்கு வேண்டாம் .

எல்லாவற்றையும் வேண்டாம் வேண்டாம் என்று ஒதுக்குகிறாயே, உனக்கு என்ன தான் வேண்டும் என்று எரிச்சலோடு கேட்கிறார்கள்...

ஒவ்வொரு மனிதனும் தன்மானமும் அறிவும் பெற்று வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குக் குறுக்கே வரும் சக்திகள் என்னவாக இருந்தாலும் ஒன்று விடாமல் அவை அனைத்தையும் எதிர்க்கிறேன்.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இந்த ஒரு வேலையைத்தான் செய்து வருகிறேன். நினைவு தப்பும் காலம் வரும் வரை இந்த ஒன்றைத்தான் செய்வேன். எனக்குப் பிறகு நான் பேசிய ஒவ்வொரு பேச்சும் நான் எழுதிய ஒவ்வொரு சொல்லும் என் வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யும்.

இதை எல்லாம் செய்ய நான் யார் என்றால்?

பலவற்றைப் படித்தவன் என்றோ பெரிய பண்டிதன் என்றோ மாபெரும் சிந்தனை யாளன் என்றோ கருதிக்கொண்டு நான் பொதுவாழ்க்கைக்கு வந்துவிடவில்லை. வேறு யாரும் கண்டுகொள்ளாததால், நானே இந்தப் பணியை எடுத்து மேலே போட்டுக் கொண்டு செய்ய ஆரம்பித்து விட்டேன்.

இதில் விருதோ மதிப்போ கிடைக்காது என்று தெரியும். ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் பகைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்; ஒவ்வொருவரிட மிருந்தும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரிடும் என்றும் தெரியும்.

தெரிந்தேதான் வந்தேன். நானே எழுதி, நானே அச்சுக்கோத்து, நானே அச்சடித்து, நானே படிக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்லை , எழுதுவோம் என்றுதான் எழுத ஆரம்பித்தேன்.

ஒருவர் காதிலும் விழா விட்டாலும் பரவாயில்லை என்று வீதிக்கு நடுவில் நின்றுகொண்டு உரக்கப் பேச ஆரம்பித்தேன்.

நீங்கள் என்னை என்னதான் சொன்னாலும், என்ன தான் செய்தாலும் உங்கள் ஒருவர் மீதும் தனிப்பட்ட முறையில் ஒரு துளி கோபமோ வெறுப்போ கொள்ளமாட்டேன்.

வலிக்குமே என்று அஞ்சிக்கொண்டு இருக்காமல் ஒரு மருத்துவர் எப்படி உங்களுக்கு ஊசி போடு கிறாரோ, தேவைப்பட்டால் எப்படி அறுவைசிகிச்சை செய்கிறாரோ அப்படியே நானும் அதிக உரிமை எடுத்துக்கொண்டு உங்களை எல்லாம் விமர்சிக்கிறேன் என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் ஒவ்வொருவரையும் நான் அளவுகடந்து நேசிக்கிறேன். தீங்கு விளைவிக்கும் எந்தக் கிருமியும் உங்களை அண்டிவிடக் கூடாது என்பதற்காகத்தான் உங்களை எந்நேரமும் கவனித்துவருகிறேன்.

நாக்கில் தழும்பு ஏறும்வரை உங்களுக்காகப் பேசுவேன். கை சாய்ந்து கீழே தொங்கும்வரை உங்களுக்காக எழுதுவேன். கால்கள் துவளும்வரை உங்கள் பட்டித் தொட்டிகளில் எல்லாம் நடப்பேன்.

எனக்கு உண்மை என்று பட்டதை நான் நம்புவதைப் போல், நீங்களும் உங்களுக்கு உண்மை என்று பட்டதையே நம்புங்கள்.

> “வார்த்தைகளுக்கு உருவம் கிடையாது. ஆனால், ஒருவரது இதயத்தை மகிழ்விக்கவும், துன்பப் படுத்தவும் வார்த்தைகளால் முடியும்.”

**மந்திரச்சொல்**


www.gyanaguru.com



# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்ப தற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...

**ஞானகுரு மகிழ்ச்சி**

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா

ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜூனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com





## கவித்துவம்

மரணம் என்பது ஒன்றுமில்லை
நான் மண்ணின் கீழ் வாழ்வது;
நீ மண்ணின் மேல் வாழ்வது
அவ்வளவுதான்
நான் ஒரு கல்லறை தாவரத்தின்
வேர்களை தரிசிப்பது
நீயதன் தண்டுகளை,
பச்சையை, மலர்களை,
கனிகளை தரிசிப்பது.

– நரன்

www.gyanaguru.com

# வெற்றியைவிட முக்கியமானது மனிதாபிமானம்..!


இந்த பக்கத்தில் இடம் பெற்றுள்ள, உலகப் புகழ்பெற்ற புகைப்படத்தை எடுத்தவர் கெவின் கார்ட்டர். அவருக்கு நிறைய நிறைய பரிசும் புகழும் கிடைத்தது. ஆனால், அவர் ஒரு கட்டத்தில் தற்கொலை செய்துகொண்டார்.

காரணம் என்ன தெரியுமா?

கெவின் கார்ட்டருக்கு புகைப்படக் கலையின் மீது அபார ஆர்வம். எல்லா சிறந்த புகைப்படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல புகைப் படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தன. இந்த ஆர்வம் அவரை நாடு, நகரம், கிராமம், காடு, மலை என்று கொண்டு சென்றது. 1993ல் இந்த ஆர்வம் அவரைத் தனது சக புகைப்படப் பத்திரிக்கை யாளர்களுடன் சூடானுக்குக் கொண்டு சென்றது. அப்போது சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது.

குறிப்பாக சூடானின் தென்பகுதி மக்கள் உண்ண உணவின்றி, பருகநீரின்றி பசி,  தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர். பசி பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலைகளைக் காமிராவில் பதிவு செய்ய கெவின் தொலைதூர கிராமங்கள் வரை சென்றார். இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் காமிராவை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக்கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்த போது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது. பசி பஞ்சத்தால் அடிபட்ட நோஞ்சன் நிலையில் உள்ள ஒரு சிறுமி நடக்கக் கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலை தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார்.

அந்தச் சிறுமி ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங்கும் முகாமை நோக்கி தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்தது உண்மையிலேயே இதயத்தைப் பிழியக் கூடியதாக




www.gyanaguru.com


www.gyanaguru.com











இருந்தது. தோளில் இருந்து காமிராவை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது.

ஆம், அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்குப் பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக் கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்திக் கொண்டு இருந்தது.

எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும்; மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் சிறிது மாமிசத்தையும் எப்போது சாப்பிடலாம் எனக் காத்திருந்தது பிணம் தின்னிக்கழுகு.

கெவின் கேமரா லென்சை கண்ணுக்கு ஒத்திக் கொண்டார்; சிறுமியையும் கழுகையும் ஒரு பிரேமில் அடக்கிக் கொண்டு 'க்ளிக்'செய்தார். இப்போது அவரது புகைப்படக்கருவியில் மிக அரிதினும் அரிதான படம் பதிவாகி விட்டது.

இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியை ஸ்டார்ட் செய்தார்; பறந்து விட்டார். இந்த அரிதான படத்தை 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிக்கைக்கு விற்று விட்டார். இந்தப் புகைப்படம் 1993 மார்ச் திங்கள் 26 ம் நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது. இந்தப் படத்தைப் பார்த்ததும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

அனைவரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டனர். புகைப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிருடன் பிழைத்தாளா அல்லது இறந்து விட்டாளா? இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிக்கையின் தொலைபேசி ஆப்ரேட்டரிடமோ படத்தை எடுத்த கெவின் கார்ட்டர்டமோ இல்லை.

1994,மே 23 அன்று பெரும் கை தட்டல்களுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியப் பல்கலைக் கழகத்தின் பிரமாண்டமான அரங்கத்தில் இந்த அரிதான புகைப்படத்திற்கான புலிட்சர் விருதப் பெற்றுக்கொண்டார். இந்த விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது.

விருது பெற்ற சில நாட்களுக்குப் பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார். காரணம் ஒரு கடிதம். கெவினுக்கும் அங்கு இருந்த பிணம்தின்னிக் கழுகுக்கும் என்ன வேற்றுமை? இரண்டும் ஒரே விதமாகத்தான் செயல் பட்டுள்ளனர். குறைந்தபட்சம் புகைப்பட நிபுணர் கெவின் அந்த சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் தந்து உயிரைக் காப்பாற்றி இருக்கலாம்; அல்லது தனது வலுவான

> "தவறுகள் வலி கொடுக்கலாம். ஆனால், அது தரும் படிப்பினை வாழ்நாள் முழுவதும் பயன்படக்கூடியது."

## மந்திரச்சொல்


கைகளினால் அந்தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சேர்த்து இருக்கலாம்; கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம்;

ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்தார்; அதை அதிக விலை தந்த பத்திரிக்கைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் அவர் மீது குற்றம் சாட்டியதுதான் காரணம். இரண்டு மாதங்களுக்குப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது. அதில் அவர் பிணமாகக் கிடந்தார். கெவின் தற்கொலை செய்து கொண்டார். அவரது பிணத்திற்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன.

முதல் வரி I am Really, Really Sorry...

நாம் எவராக இருந்தாலும் சரி, நம்மிடம் மனிதம் நேயம் இல்லையெனில் நாமும் மிருகத்திற்கே ஒப்பாவோம்....!

**.. A. S. சங்கர பாண்டியன்**





www.gyanaguru.com



# இழந்தது ஒன்று இருப்பது எத்தனை..?

காலை உணவாக ஒரு பப்பாளி பழத்தை ரசித்து தின்றுகொண்டிருந்தார் ஞானகுரு. அப்போது ஒளியிழந்த கண்களுடன் வந்து நின்றார் ஒருவர். பாதி பழத்தைக் கொடுத்ததும் அதை மறுத்து, கேள்வியைக் கேட்டார்.

”சுவாமி, நான் நன்றாக வாழ்ந்தவன். என்னுடைய ஃபேக்டரியில் 500 பேர் வேலை செய்தனர். ஒரு தவறான முயற்சியில் தோல்வியை சந்தித்தேன். அந்த தோல்வியில் இருந்து பெரிய வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ஒரு புதிய முயற்சியைத் தொடங்கினேன். ஆனால், அதுவும் மிகப்பெரிய தோல்வி. இப்போது என் வீடு, ஃபேக்டரி என அத்தனையையும் இழந்து விட்டேன். சொந்த ஊரைவிட்டு புதிய ஊருக்கு வந்திருக்கிறேன். இனியும் நான் எதற்காக உயிர் வாழ வேண்டும்..?” என்று கேட்டார்.

‘‘உனக்கு உயிர் வாழும் ஆசை அதிகமாக இருக்கிறாய். அதனால்தான், வெற்றி பெறுவதற்கான வழியைத் தேடி வந்திருக்கிறாய். உயிர் வாழும் ஆசை இல்லையென்றால், இங்கே வந்த நேரத்தில் நீ தற்கொலை செய்திருப்பாய்” என்று சிரித்ததும் தலை குனிந்தார்.

‘‘செல்வம் யாருக்கும் சொந்தமானது அல்ல. இன்று உன்னிடம் இருப்பது நாளை வேறு ஒருவரிடம் இருக்கும். ஆனால், உன்னுடைய உடல், உன்னுடைய மனம், தன்னம்பிக்கை, தைரியம், அனுபவம், திறமை ஆகியவை என்றென்றும் உன்னுடன் இருக்கிறது. இத்தனை தகுதிகள் உன்னுடன் இருக்கும்போது, பணம் மட்டும்தானே போயிருக்கிறது. ஒன்றே ஒன்று போனதற்காக ஏன் வருந்துகிறாய்? இப்போதும் உன்னால் ஒரு தொழில் தொடங்க முடியும். அந்த தொழிலில் நீயே முதலாளியாகவும், நீயே தொழிலாளியாகவும் இரு. உன் அனுபவம், அறிவை முதலீடு செய்.

பழைய வாழ்க்கையை ஒரு கனவு என்று எண்ணிக் கொள். கனவு கலைந்ததும் நிஜ வாழ்க்கைக்கு வந்துவிட்டாய். பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உன் உடல் உறுதியாகவே இருக்கிறது. அதனால் புதிய மனிதனாக பிறப்பெடுத்துக்கொள்... கூட்டுப் புழுவில் இருந்து வண்ணத்துப் பூச்சியாக மாறி விட்டதாக எண்ணிக்கொள். தன்னுடைய சொத்தை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு புத்தர் உண்மையைத் தேடினார். நீ சொத்துக்களை எல்லாம் இழந்து புதிய வாழ்க்கையைத் தேடு” என்றார் ஞானகுரு.

முகத்தில் புன்னகையுடன் கிளம்பினார் புதியவர்.

# பணம் தரும் மனம்

**அத்தியாயம்-10**

எல்லா மனிதர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கடவுள் என்றால், அது பணம் மட்டும்தான். அதனால்தான் எல்லா மனிதர்களும் பணத்தை விரும்புகிறார்கள். பணம் மட்டும் இருந்துவிட்டால், வாழ்க்கையில் எல்லாமே கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள். இது ஒரு வகையில் உண்மையும்தான்.

உங்களுக்கு பணம் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைதான், உங்களுக்கு பணத்தை கொண்டுவரும் சக்தி மந்திரம். ஆம், பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மிகவும் ஒவ்வொரு நபருக்கும் முக்கியமானது. எனவே, பணத்தின் மீது விருப்பம், மதிப்பு, அன்பு வைக்க வேண்டும்.

**ஆழ்மனமே தாழ் திறவாய்!**

’எனக்குப் பணம் முக்கியமில்லை... நான் பணத்தை பெரிதாக மதிப்பதில்லை’, ‘பணம் என்பது ஒரு சாதாரண வெற்றுக் காகிதம், ‘பணம் எனக்கு கால் தூசு’ என்றெல்லாம் அவமரியாதை செய்துவிட்டு, பணம் சேரவில்லையே என்று புலம்பாதீர்கள். இதன் அர்த்தம் என்னவென்றால், பணம் உங்களிடம் வந்து சேராது என்ற எண்ணம்தான் உங்கள் ஆழ்மனதில் நிரம்பியிருக்கிறது என்பதுதான். எனவே, அதனை முதலில் சுக்குநூறாக உடைக்க வேண்டும்.

பணம் வேண்டும் என்றால், பணத்தின் மீது அன்பும், நம்பிக்கையும் ஆழ்மனதில் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கையை வலிமையாக்குவதற்கு தினமும், ‘ நான் பணக்காரன், பணம் என்னைத் தேடி வரும், எனக்குத் தேவையான அளவுக்கு பணம் நிச்சயம் கிடைக்கும், இந்த உலகம் எனக்கு பணம் கொடுக்கும், நான் நினைக்கும் அளவை விட அதிகம் செல்வம் வரும் ’ என்று வாய்விட்டு சொல்லிப் பழகுங்கள். இது ஒரு கல்வெட்டு போன்று மனதில் பதிய வேண்டும்.

எந்த ஒரு நேரத்திலும், ’என்னிடம் பணம் இல்லை”, ‘நான் ஏழை’ என்ற நெகடிவ் சிந்தனை வேண்டவே வேண்டாம். உண்மையில் போதிய அளவுக்குப் பணம் இல்லாதபோது, அதைத்தானே பேச முடியும் என்கிறீர்களா..?

அப்படி இல்லை. பணக்கஷ்டம் பற்றி புலம்புவதால் மட்டும் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. பணம் இல்லாத ஒருவர் யாரிடம் கடன் கேட்டாலும், அது கிடைக்கவே செய்யாது. ஆனால், பணக்காரர் கேட்டால் கிடைக்கும். உண்மையில், பணக்காரர் என்று அவர் சொல்வதை அனைவரும் நம்புகிறார்கள், அவ்வளவுதான். ஏனென்றால், எந்த பணக்காரரும் என்னிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது என்பதை வெளிப்படையாக யாருக்கும் காட்டுவதே இல்லை. பேச்சு, செய்கை மூலம் தன்னை பணக்காரராக காட்டிக் கொள்கிறார். எனவே, நீங்களும் ஒரு பணக்காரர் போலவே நடந்துகொள்ளுங்கள். பணம் வந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் பயணம் செய்வதுதான் பணக்காரராகும் முதல் வழி.

அடுத்த வழி என்ன தெரியுமா..?

நீங்கள் நேரடியாக பணத்தைத் தேடக் கூடாது. ஆம், நேரடியாக பணத்தை தேடினால் அது கிடைக்காது. கிடைத்தாலும் நிலைக்காது. திருடர்களும், கொள்ளைக்காரர்களும் அப்படித்தான் பின்வாசல் வழியே பணத்தை அடைந்துவிட நினைக்கிறார்கள். ஒருசிலர் அந்த வழியில் பணத்தை அடைந்தும் விடுகிறார்கள். ஆனால், அந்த பணம் அவர்களை நிம்மதியாக இருக்க விடுவதில்லை. அந்த பணத்தை அவர்களால் அனுபவிக்க முடிவதில்லை. அந்த பணம் ஏதேனும் ஒரு நேரம் நிச்சயம் பிரச்னையில் மாட்டி வைத்துவிடும். எனவே, நேரடியாக பணத்தைத்



www.gyanaguru.com



தேடாமல், பணம் வரும் வழியைத் தேடுங்கள்.

அது எப்படி..?

எந்த வழியில் பணம் சம்பாதிக்கலாம், என்னுடைய திறமை எது, எதில் அதிக பணம் கிடைக்கும் என்று உங்கள் ஆழ்மனதுடன் பேசுங்கள்.

மாதம் 50 ஆயிரம் இருந்தால் போதும் என்று உங்கள் ஆழ்மனம் விரும்புகிறது என்றால், அதற்கேற்ற வேலை தேடுங்கள். மாதம் 5 லட்சம் வருமானம் வேண்டும் என்று ஆழ்மனம் ஆசைப்பட்டால், தொழில் செய்யுங்கள்.

முதலீடு இல்லாமல் எப்படி தொழில் செய்ய முடியும்..? உங்கள் முதலீட்டுக்குத் தேவையான பணம் கிடைக்கும் என்று நம்புங்கள். நீங்கள் செய்ய இருக்கும் தொழில் என்னவென்று முடிவு செய்யுங்கள். அந்த தொழிலில் இருக்கும் லாப வாய்ப்புகள் பற்றி பலருடமும் ஆதாரத்தின் அடிப்படையில் பேசுங்கள். உங்களுக்கு உங்கள் தொழில் மீது நம்பிக்கை இருந்தால், அந்த நம்பிக்கை நிச்சயம் முதலீட்டை தேடி இழுத்துக் கொண்டுவரும்.

எனவே, பணம் சம்பாதிக்கும் வழியைத் தேர்வு செய்வதுதான் முக்கியம். அப்படித்தான் தேர்வு செய்துதான், உலக மெகா கோடீஸ்வரர்கள் வரிசையில் இடம் பிடித்தார் வாரன் பஃப்பட். இவர் ஏழையாக இருந்த வர்தான். ஆனால், ஏழையாக இருக்க விரும்பியதில்லை.

பங்குச்சந்தை என்பதை ஒரு சூதாட்டமாக எல்லோரும் பார்த்த நேரத்தில், அதனை சரியாகப் பயன்படுத்தினால் பணம் கிடைக்கும் என்று நம்பினார் பஃப்பட்.

ஒரு நிறுவனத்தின் பங்கினை 38 டாலருக்கு வாங்கி, அது 40 டாலருக்கு உயர்ந்ததும் விற்பனை செய்தார். சில வருடங்களில் அந்த பங்கின் விலை 200 டாலராக உயர்ந்தது. அப்போதுதான் பங்கு விற்பனையைப் பொறுத்தவரை, காத்திருப்பது முக்கியமான காரியம் என்பதை உணர்ந்தார். அதேநேரம் பங்குச்சந்தை பற்றி என்னவெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அத்தனையும் தெரிந்துகொள்ளத் துடித்தார்.

ஒரு நிறுவனத்தின் லாப நஷ்டத்தை கணக்கிட்டு

“உன்னை சுற்றியுள்ள அனைவருமே தவறானவர்களாகத் தெரிந்தால், தவறு உன்னிடம்தான் இருக்கிறது.”

## மந்திரச்சொல்

பங்கு வாங்கக்கூடாது, அந்த நிறுவனத்தின் செயல்பாட்டை பார்த்து வாங்கவேண்டும் என்பதை புரிந்துகொண்டு செயல்பட்டார். பங்குசந்தை இறங்குமுகத்தில் இருந்தாலும் குறிப்பிட்ட சில பங்குகள் தொடர்ந்து நன்றாகவே செயல்படும் என்பதில் வாரன் பஃப்பட் உறுதியாக இருந்தார். இப்போது நிறுவனம் எப்படி செயலாற்றுகிறது என்பதைவிட, எதிர்காலத்தில் எப்படி செயல்படும் என்பதை அறிந்து முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டினார். இதுதான் வாரனின் வெற்றிக்கு அடிப்படை காரணமாக அமைந்தது.

ஆம், அவர் நேரடியாக பணத்தைத் தேடவில்லை. எந்த நிறுவனங்களில் முதலீடு செய்தால் பணம் கிடைக்கும் என்பதை ஆய்வு செய்து முதலீடு செய்தார். மேலும், நலிந்த நிலையில் செயல்பட்ட சில கம்பெனிகளின் பங்குகளை வாங்கி, நிர்வாகத்தை சீர்செய்து வெற்றி பெற்றார்

‘பங்கு வாங்கும்போது லாபத்தை மட்டும் எதிர்பார்க்காமல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகத்தில் பங்கெடுக்கும் எண்ணத்தில்தான் பங்குகளை வாங்குவேன்’ என்கிறார் வாரன். அதாவது அந்த நிறுவனத்தை தன்னுடைய சொந்த நிறுவனமாகவும், செயல்திறனுக்காக கூடுதல் பணம் போடுவது போலவும் சிந்தித்து பங்குகளை வாங்குகிறார். ஒரு நிறுவனத்தின் பங்கு விலை ஏறிக்கொண்டு வருகிறது என்பதற்காக அதனை வாங்குவது முட்டாள்தனமானது என்பது வாரனின் வாதம். நிறுவனத்தின் செயல்பாடுகளை மட்டுமே கவனிக்கவேண்டும், அந்த நிறுவன லாபத்தை கவனிப்பது கூடாது என்கிறார்.

அதேபோன்று சந்தையில் புதிதாக நுழையும் எந்த நிறுவனத்திலும் பணத்தை கொட்ட வாரன் விரும்புவதில்லை. சில காலம் அவர்கள் செயலாற்றியபிறகுதான் முடிவு செய்கிறார். இதைவிட முக்கியமான விஷயம் மக்களுக்குப் பயன்படக்கூடிய, மக்களுக்கு புரியக்கூடிய தொழில் நிறுவன பங்குகளையே வாங்குவார். அதாவது சோப்பு, எண்ணெய், சீப்பு தயாரிக்கும் நிறுவனங்களில்கூட முதலீடு செய்வாரே தவிர, எந்தக் காரணம் கொண்டும் ஐ.டி. நிறுவனங்களில் பணத்தைக் கொட்ட மாட்டார். ஐ.டி. தொழில்நுட்பம் எனக்குத் தெரியாது என்பதால் அந்தப் பங்குகளை வாங்கவில்லை என்கிறார்.



ஏதேனும் நிறுவனத்தில் தில்லுமுல்லு நடைபெறுவதாக தெரியவந்தால் உடனடியாக அத்தனை முதலீட்டையும் திரும்ப பெற்றுக்கொள்வார். நேர்மையில்லாத நிர்வாகம் எப்போதும் வெற்றி தராது என்பது வாரனின் அசைக்க முடியாத நம்பிக்கை. பணத்தின் மீது பெருமதிப்பு கொண்டி ருந்த காரணத்தால்தான், 2008ம் ஆண்டு பில்கேட்ஸை முந்தி, உலகின் முதல் பணக்காரராக மாறினார்.

பணம் சம்பாதிப்பதற்கு அவர் இரண்டு விதிகள் வைத்திருக்கிறார். எந்தக் காரணம் கொண்டும் பணத்தை இழக்கக்கூடாது என்பது முதல் விதி. முதல் விதியை ஒருபோதும் மீறக்கூடாது என்பது இரண்டாவது விதி என்கிறார் வாரன்.

எனவே, நீங்கள் பணத்தின் மீது நம்பிக்கை வையுங்கள். நம்பிக்கை வைத்த மனம், உங்களுக்கு நிச்சயம் பணத்தை கொண்டுவந்து கொடுத்துவிடும்.

ஏனென்றால் ஆழ்மனம் என்பது உங்களுடைய வேலைக்காரன். அவனுக்கு நீங்கள் என்ன கட்டளை கொடுக்கிறீர்களோ, அதனை செவ்வனே செய்வான். உங்கள் வேலைக்காரனை நீங்கள் சரியாக வேலை வாங்காவிட்டால், அதன் மந்தமாகத்தான் இருப்பான்.

பணம் கொண்டுவா என்று உத்தரவு கொடுத்தால், நிச்சயமாகக் கொண்டுவருவான். எனக்கெல்லாம் அதிர்ஷ்டமே கிடையாது, எனக்கு எப்படி பணம் கிடைக்கும் என்று அந்த வேலைக்காரனிடம் நீங்கள் சொல்லிவைத்தால், அவனும் அப்படித்தான் உங்களிடமே திருப்பி சொல்வான். ஆகவே, ஆழ்மனம் எனும் வேலைக்காரனை பணம் தேட அனுப்பி வையுங்கள். அவன், நிறைய நிறைய செல்வங்களைக் கொண்டுவந்து கொட்டுவான்.

அது சரி, உள்ளுணர்வை நம்பலாமா என்று சிலர் கேள்வி கேட்கிறார்கள். உள்ளுணர்வும் ஆழ்மனமும் ஒன்றுதானா..?

**- அடுத்து பார்க்கலாம்.**



www.gyanaguru.com



Regain your confident smile with **Full mouth Dental Implants** at

# Rajan Dental

RAJAN
Dental

- Laser
- Braces
- Implants
- Root cancal
- Teeth Replacement
- Bleaching
- General Dentistry
- Cosmetic Dentistry
- AI based diagnostics



For appointments

**Rajan Dental,**
56, Dr.Radhakrishnan Salai,
Myalapore, Chennai 600 004.
Ph: 044 40105050 +91 96000 70003
www.rajandental.com
facebook.com/RajanDental